அரியசந்தர்ப்பம்!
01 — 11 — 93 தொடக்கம்
12 — 11 — 93 வரை
மலிவு விற்பனை
சோபனா
ஆடை அகம்
16, பெரியகடை,
யாழ்ப்பாணம்.

பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

இன்றைய அறிமுகம்.
நாளைய நாகரீகம்!!
ஆதிக்க ஆடைகளில்
சோபிக்க சோபனா
சோபனா
ஆடை அகம்
16, பெரியகடை,
யாழ்ப்பாணம்.

சுடர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஐப்பசி 25 புதன்கிழமை (10 — 11 — 1993) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 347

## ஆஸியில் புலிகளுடன் சபாநாயகர் பேசினார்?

"வடக்கு – கிழக்கு பிரச்சினையைத் தீர்ப்பதற்கான புதிய முயற்சியாக விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் திரு. பிரபாகரனைச் சந்திக்க நான் விரைவில் யாழ்ப்பாணம் செல்லவுள்ளேன்.

– சபாநாயகர் எம். எச். முஹம்மது கொழும்புக்கு வெளியே நடந்த கூட்டம் ஒன்றில் பேசியபோது முன்கண்டவாறு தெரிவித்தார் என்று கொழும்புப் பத்திரிகைகள் நேற்று செய்தி வெளியிட்டன.

இப்பத்திரிகைச் செய்திகள் உண்மையானவை என்று சபாநாயகரின் பேச்சாளர் ஒருவர் வெரித்தாஸ் வானொலிக்கு தெரிவித்தார்.

சபாநாயகர் முஹம்மது சமீபத்தில் ஆஸ்திரேலியா சென்றிருந்த போது, அங்கு விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளைச் சந்தித்தார் என்றும்—

இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் விஷயத்தில் தலையிடத் தாம் விரும்புவதாக சபாநாயகர் அப் பிரதிநிதிகளிடம் தெரிவித்தார் என்றும் –

அந்தப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்துக்கு வரும்படி கோரும் விடுதலைப் புலிகளின் அழைப்பை சபாநாயகர் எதிர்பார்த்து இருக்கிறார் என்றும் —

இவ்விடயத்தில் சபாநாயகர் முஹம்மது அரசினதோ அல்லது ஐக்கிய தேசியக் கட்சியினதோ பிரதிநிதியாக இல்லாமல் நாடாளுமன்றச் சபாநாயகர் என்ற வகையிலேயே செயல்படுவார் என்றும் அப்பேச்சாளர் மேலும் குறிப்பிட்டார். (உ-6)

## தமது தீர்வுத் திட்டத்தை முஹம்மது எடுத்து வருவார்

புதுடில்லி, நவ. 10

யாழ்ப்பாணத்துக்கு திறந்த மனதுடன் செல்லவிருப்பதாகக் கூறியுள்ள சபாநாயகர் முஹம்மது தம்முடன் தமது சொந்த சமாதான யோசனைகளை எடுத்துக் செல்லவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

ஆனால் தமது சமாதான யோசனைத் திட்டத்தில் உள்ள விவரங்களை வெளியிட அவர் மறுத்து விட்டார் என ஆஸ்திரேலிய வானொலி தெரிவித்தது.

இதற்கிடையில் —

சபாநாயகரின் சமாதான முயற்சி பற்றி அவசரப்பட்டு கருத்துத் தெரிவிக்கவிரும்பவில்லை என்று கொழும்பு அரசு தெரிவித்துள்ளதாகவும் —

சபாநாயகரின் யாழ்ப்பாணவிஜயத்தைப் போராளிகள் வரவேற்றுள்ளதாகவும் புதுடில்லியில் இருந்து ஆஸ்திரேலிய வானொலிச் செய்தியாளர் கோர்டன் டெய்லர் தெரிவித்தார். (உ-எ)

## பிரபாகரனுடன் மட்டுமே முஹம்மது பேசுவாராம்!

விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்த ஒரேயொரு நிபந்தனையை சபாநாயகர் விதித்திருப்பதாக ஆஸ்திரேலிய வானொலி நேற்று மாலை அறிவித்தது.

விடுதலைப் புலிகளின் தலைவர் திரு.வே. பிரபாகரனுடன் மட்டுமே தாம் பேச்சு நடத்தப் போவதாகவும் —

அவரது உதவியாளர்களுடன் தாம் பேச்சு நடத்தப் போவதில்லை என்றும் —

சபாநாயகர் கூறியிருப்பதாக ஆஸ்திரேலியா வானொலி மேலும் தெரிவித்தது.

ஆஸ்திரேலியாவில் வைத்து விடுதலைப் புலிகளின் பிரமுகர்களை சபாநாயகர் முஹம்மது சந்தித்த போது —

திரு. பிரபாகரன் பேச்சுக்களில் கலந்து கொள்வார் என்ற நிபந்தனையின் பேரில் மட்டுமே தாம் இவ்விடயத்தில் தலையிடுவதாக சபாநாயகர் தெரிவித்தார் என்றும் —

விடுதலைப் புலிகள் அக்கோரிக்கைக்கு இணங்கினார்கள் என்றும் —

சபாநாயகரின் பேச்சாளர் கொழும்பில் குறிப்பிட்டார். (உ-எ-6)

## மடு அகதி முகாம் பராமரிப்பு பணி: ஐ.நா. தூதரகம் இடை நிறுத்தியது

கொழும்பு, நவ. 10

மன்னார் மடு அகதிகள் முகாமில் தாம் மேற்கொண்டு வந்த உதவிப்பணிகளைத் தற்காலிகமாக இடை நிறுத்தி வைக்க ஐ. நா. அகதிகள் தூதரகம் முடிவு செய்துள்ளதாக பி.பி.ஸி, அறிவித்தது.

இலங்கையிலேயே மிகப் பெரியதான மடு அகதி முகாமில் 30 ஆயிரம் அகதிகள் தங்கி உள்ளனர்.

அவர்களில் ஆறாயிரம் பேருக்கு உணவு நிவாரணத்தை நிறுத்தப் போவதாக அரசு முன்னர் முடிவு செய்திருந்ததும் —

இதற்கு ஆட்சேபம் தெரிவிக்குமுகமாக பத்துத் தினங்களுக்கு முன்னர் ஐ. நா. தூதரகம் முன்பாக ஆர்ப்பாட்டம் இடம்பெற்றதும் —

அப்போது ஐ.நா. தூதரக வாகனம் தடுத்து வைக்கப்பட்டதும் —

ஐ. நா. தூதரக அதிகாரி ஒருவர் அருகில் உள்ள தேவாலயம் ஒன்றில் அடைக்கலம் புகுந்ததும் தெரிந்தவையே.

ஆறாயிரம் அகதிகளுக்கான நிவாரணத்தை மறுப்பதன் மூலம் அவர்களை படிப்படியாக மடுவில் இருந்து வெளியேற்றி இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளுக்குள் மீளக்குடியர்த்துவதே அரசின் நோக்கமாக இருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது. (உ-எ-6)

## ஐ.நா. செயலாளரின் தூதர் இன்று வவுனியா வருகை

### அகதிகள் நிலைமைப் பார்வையிடுவார்

ஐ. நா. செயலாளரின் விசேட தூதுவர் திரு. பிரான்ஸிஸ் டென் இன்று வவுனியாவுச்கு விஜயம் மேற்கொள்கிறார்.

தமிழகத்தில் இருந்து இலங்கை திரும்பியுள்ள ஈழ அகதிகளின் நிலைமை, அவர்கள் மீளக் குடியேற அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் வசதிகள், அவர்களுக்காக வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் சுயதொழில் வாய்ப்பு திட்டங்களின் பயன்கள் ஆகியவை குறித்து அவர் நேரடியாக ஆராய்ந்து ஐ. நா. செயலாளருக்கு அறிக்கை சமர்ப்பிக்க இருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

இன்று, வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு பகுதிகளுக்கு விஜயம் செய்யும் அவர் அகதிகளுடன் நேரடியாக கலந்துரையாடுவார்.

இவரின் விஜயம் தொடர்பான ஏற்பாடுகளை கவனிப்பதற்காக அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தின் கொழும்பு அலுவலக அதிகாரி திரு பீட்டர் நிக்கலெஸ் நேற்று வவுனியாவுக்கு வந்திருந்ததாக தகவல்கள் தெரிவித்தன. (உ-3)

## கிளாலி சேவை நாளை நடக்கும்

கிளாலி — பூநகரி படகுச் சேவை நாளை வியாழக்கிழமை வழமையான நேரத்தில் நடைபெறும் என விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்.

# இனப்பூசல்களை தீர்க்காத நாடுகளில் ஐ.நா. தலையிடும்

## செயலாளர் நாயகம் எச்சரிக்கை

லண்டன், நவம்பர் 10

இனப்பிரச்சினையால் எழும் யுத்தங்களை அந்தந்த நாடுகள் தீர்த்துக்கொள்ள வேண்டும். தவறினால் அந்த நாடுகளில் ஐக்கிய நாடுகள் சபை தலையிடும்.

ஐ நா. பொதுச் செயலாளர் பூட்ரஸ் பூட்ரஸ் காலி இவ்வாறு எச்சரிக்கை விடுத்திருக்கிறார்.

அமெரிக்கா – வாஷிங்டனில் உள்ள தேசியபாதுகாப்புப் பல்கலைக்கழகத்தில் பேசியபோது அவர் இக்கருத்தை வெளியிட்டார்.

உலக நாடுகள் பலவற்றில் தற்போது இடம்பெற்று வரும் உள்நாட்டு யுத்தங்களுக்குக் காரணம் அந் நாடுகளில் நிலவும் இனப்பிரச்சினையே.

இதனால் சர்வதேச அமைதிக்கும் சமாதானத்துக்கும், உலகப் பாதுகாப்புக்கும் பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

எனவே எந்த ஒரு நாடும் இனப்பிரச்சினையைக் கவனிக்காமல் இருக்க முடியாது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

(5 ஆம் பக்கம் பார்க்க)

## அரச ஊழியருக்கு ஜனவரியில் விசேட முற்பணம்

கொழும்பு, நவ. 10

அரசு ஊழியர்களுக்கு 1994 ஆம் ஆண்டு ஜனவரி, பெப்ரவரி மாதங்களில் விசேட முற்பணம் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆயிரம் ரூபா முற்பணமாக வழங்கப்படும் என்றும் அதற்கு 14 சதவீத வட்டி வசூலிக்கப்படும் என்றும் பொது நிர்வாக அமைச்சு அறிவித்துள்ளது.

பண்டிகைக்கால முற்பணத்துக்குப் புறம்பாக இம் முற்பணம் வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-எ)

## வீரச்சாவு

யாழ்ப்பாணம், நவ. 10

நேற்று முன்தினம் காலை மட்டக்களப்பு மாவட்டம் கருவந்தன் வெளியால் சென்று கொண்டிருந்த விடுதலைப் புலிகள் மீது இராணுவத்தினர் மறைந்திருந்து நடத்திய தாக்குதலில் இரண்டாம் லெப்டினன்ட் ராஜேந்திரகுமார் அல்லது ஆதவன் (சண்முகம் தயாலிங்கம்– மகிழடித்தீவு, மட்டக்களப்பு) என்ற போராளி வீரச்சாவடைந்தார். (உ-த)

## அனுரா நாளை டி.பி.முன் அமைச்சராகப் பதவி ஏற்பு

திரு. அனுரா பண்டாரநாயக்கா நாளை வியாழக்கிழமை காலை ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப் பட்டியல் எம்.பியாகப் பதவிப் பிரமாணஞ் செய்யவிருக்கிறார்.

நாளை பிற்பகலிலேயே அவர் வர்த்தக, பொருளாதார, வெளிநாட்டு வளங்கள், முதலீடுகள் அமைச்சராக ஜனாதிபதி விஜேதுங்கா முன்னிலையில் பதவிப்பிரமாணஞ் செய்து கொள்வார்.

அரச வட்டாரங்களை மேற்கோள் காட்டி கொழும்பு செய்தி ஏஜென்ஸி ஒன்று இத்தகவலை வெளியிட்டது.

அனுராவுக்காக உருவாக்கப்படும் புதிய அமைச்சிடம், தற்போது நிதி மற்றும் வர்த்தக அமைச்சுகளின் கீழ் உள்ள பல விஷயங்களும் ஆடைத் தொழிற்சாலைகள் மற்றும் வெளிநாட்டு வளங்கள் தொடர்பான பல விஷயங்களும் ஒப்படைக்கப்படவிருப்பதாகவும் அரச வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (உ-6)

## இன்று 'பட்ஜெட்' சமர்ப்பிப்பு ரூ.7 ஆயிரம் கோடி துண்டு!

கொழும்பு, நவ. 10

ஜனாதிபதி விஜேதுங்க தலைமையிலான அரசாங்கத்தின் முதலாவது வரவு செலவுத் திட்டத்தை இன்று பிற்பகல் நாடாளுமன்றத்தில் நீதி அமைச்சரும் நிதி ராஜாங்க அமைச்சருமான ஹரோல்ட் ஹேரத் சமர்ப்பிப்பார்.

ஜனாதிபதியே நிதி அமைச்சராகவும் பணி புரிவதால் நிதி இராஜாங்க அமைச்சர் வரவு செலவுத் திட்டத்தை சமர்ப்பிக்கிறார்.

இலங்கை வரலாற்றில் நிதி அமைச்சர் அல்லாத ஒருவர் வரவு செலவுத் திட்டத்தைச் சமர்ப்பிப்பது இதுவே முதல் தடவையாகும். இந்த வரவு செலவுத் திட்டத்தில் 6,998 கோடி ரூபா துண்டு விழுகிறது. (க)

## வரவு - செலவுத் திட்டத்தை எதிரணியினர் பகிஷ்கரிப்பர்?

கொழும்பு, நவ. 10

இன்று பிற்பகல் நாடாளுமன்றத்தில் வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படும் போது அதனை பகிஷ்கரிப்பது குறித்து எதிரணிக் கட்சிகள் தீவிர ஆலோசனை நடத்தி வருகின்றன.

நிதியமைச்சரல்லாத ஒருவர் வரவு செலவுத் திட்டத்தைச் சமர்ப்பிப்பது நாடாளுமன்ற சம்பிரதாயத்துக்கு முரணானது என்று கூறியுள்ள எதிர்க் கட்சிகளின் தலைவர்கள், நேற்று பிற்பகல் சபாநாயகர் தலைமையில் நடந்த கூட்டத்தில் ஒரு வேண்டுகோளை விடுத்தனர்.

சம்பிரதாயத்துக்கு மாறான இச்செயல் குறித்து வரவு செலவுத் திட்டத்தை சமர்ப்பிப்பதற்கு முன்பதாக ஆகக் குறைந்தது கண்டன அறிக்கை ஒன்றை விடுவதற்கு அனுமதி வழங்க வேண்டும் என்று எதிரணியினர் அக்கூட்டத்தில் கோரினர். ஆளுங்கட்சிப் பிரதிநிதிகள் அதனை ஏற்கவில்லை.

சுபவேளையில் வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படவிருப்பதால் இக்கோரிக்கையை ஏற்கமுடியாது என்று அரசு தெரிவித்தது.

வரவு செலவுத் திட்ட உரையைப் பகிஷ்கரிப்பது பற்றிய முடிவை எதிர்க்கட்சிகள் இன்று நண்பகல் பன்னிரண்டு மணிக்குக் கூடி எடுக்கவிருப்பதாகச் சொல்லப்படுகிறது.

## பாதிப்புற்றோருக்கான நிவாரணம் நிறுத்தம்!

### அரசாங்கம் திடீர் உத்தரவு

யாழ்ப்பாணம், நவ. 10

கடும் பாதிப்புற்றோருக்கான நிவாரணக் கொடுப்பனவுகள் இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகளில் வாழ்வோருக்கு இனிக் கிடைக்காது. அந்தக் கொடுப்பனவுகளை உடனடியாக நிறுத்தி வைக்குமாறு அரசு உத்தரவிட்டுள்ளது.

புனர்வாழ்வு, புனரமைப்பு, சமூக நலந்துறை அமைச்சு யாழ். அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகருக்கு இந்த உத்தரவு குறித்து நேற்று அறிவித்தது.

கடும் பாதிப்புற்றோருக்கான நிவாரணத் திட்டத்தின் கீழ் —

வன்செயல் சம்பவங்களால் இறந்த ஒருவரின் குடும்பத்துக்கு50 ஆயிரம் ரூபாவும் —

ஊனமடைந்தவரின் குடும்பத்துக்கு 25 ஆயிரம் ரூபா

(5 ஆம் பக்கம் பார்க்க)

### மூச்சந்தி முரளி



வரவு எட்டணா......செலவு பத்தணா!......கடைசியில் துந்தணா...... துந்தணா......!

## பலாலிக்கு பயிற்சிக்கு வந்த 23 படையினர் தற்கொலை

கொழும்பு, நவ. 10

பலாலி இராணுவ முகாமில் பயிற்சி பெற்று வரும் புதிய இராணுவச் சிப்பாய்களில் 23 பேர் தற்கொலை செய்ததாகச் சொல்லப்படுகிறது.

இராணுவத்தில் மிக அண்மையில் சேர்க்கப்பட்ட பத்தாயிரம் பேரில் ஒரு தொகுதியினர் பலாலி இராணுவத் தளத்தில் பயிற்சி பெற்று வருகின்றனர்.

பயிற்சியின்போது தாக்குதல் நடவடிக்கை ஒன்றில் ஈடுபடுமாறு கட்டாயப் படுத்தப்பட்டதைத் தொடர்ந்தே 23 பேர் தற்கொலை செய்ததாக சிங்கள வார இதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

குறிப்பிட்ட பத்திரிகையின் கடந்த 31 ஆம் திகதி இதழில் இச்செய்தி வெளியாகி உள்ளது. (அ-9)

## விவசாயிகளுக்கு பொருள் வாங்க கொழும்பு சென்ற அதிகாரி கைது!

யாழ்ப்பாணம், நவ. 10

விவசாயிகளுக்குத் தேவையான பொருள்களைக் கொள்வனவு செய்து அனுப்புவதற்கெனக் கொழும்பு சென்ற உத்தியோகத்தர் ஒருவர் துறைமுகத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டதாகத் தகவல் கிடைத்துள்ளது.

யாழ். மாவட்ட விவசாய உற்பத்தி கூட்டுறவு சமாசத்திற்கு பொருள்களை கொள்வனவு செய்து பாதுகாப்பு இணைப்புக் குழுவின் அனுமதியுடன் கப்பல் மூலம் அனுப்புவதற்காக, சமாசத்தின் கொள்வனவு உத்தியோகத்தர் திரு. கே. கணேசமூர்த்தி கொழும்பு சென்றிருந்தார்.

கொள்வனவு செய்த பொருள்களை யாழ்ப்பாணம் அனுப்புவதற்குக் கொழும்புத் துறைமுகத்துக்குக் கொண்டு சென்றவேளை, இராணுவத்தினர் அவரைக் கைது செய்து கூட்டிச்சென்றதாக தங்களுக்குத் தகவல் கிடைத்திருக்கிறது என சமாச வட்டாரங்கள் தெரிவித்தன.

அவர் விடுவிக்கப்பட்டாரா இல்லையா என்பது பற்றிய தகவல் நேற்று வரை கிடைக்கவில்லை என்றும் அதே வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ்ப்பாணத்திற்கு உணவு மற்றும் பாவனைப் பொருள்களை கப்பல் மூலம் அனுப்பச் செல்லும் உத்தியோகத்தர்கள் கைது செய்யப்படுவது பற்றிய செய்தி ஏற்கனவே உதயனில் வெளிவந்தது தெரிந்ததே. (அ-17)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இணுவையம்பதி - யா/இணுவில் இந்துக் கல்லூரி

## இரும்பூதெய்தும் இதயபூர்வ இன்முகச் சிறப்பிதழ்

(10 - 11 - 1993)


ஆறுதலை வழங்கும் எம்மிணுவை
ஆறுமுகத்தானின் அருளினால்
அருங்கலைகள் ஏற்றமிக எய்தி
ஆற்றுப்படுத்த இந்துக் கல்லூரி என
மிளிரும் கல்வியாலயத்தை வாழ்த்துகிறோம்

**சுதன் பேக்கவுஸ்**
சுன்னாகம்

**சிவம், கோபு, பாபஜீ**
இணுவில்

**கமக்காரர் மாளிகை**
சுன்னாகம்

**லீலா ஸ்ரோர்ஸ்**
சுன்னாகம்

**சுகானன் ஸ்ரேர்ஸ்**
சுன்னாகம்

**கனகசபை பாலசுப்பிரமணியம்**
பிள்ளையார் கோவிலடி, இணுவில்.

**கணேசன் சென்ரர்**
தாவடி வடக்கு

**கவி போட்டோ**
இணுவில்

**சன்யோ கோப்பி & கூல் பார்**
நவீன சந்தை, சுன்னாகம்.

**நியூ லிங்கம்ஸ் ஸ்ரோர்ஸ்**
மத்திய சந்தை. திருநெல்வேலி.

**தேங்காய்எண்ணெய் ஆலை**
(M. O. L.) இணுவில்

**லிங்கம் ஸ்ரோர்ஸ்**
ஆஸ்பத்திரியடி, இணுவில்.

**க. கோபாலபிள்ளை**
K. K. S. வீதி. கோண்டாவில்

**கணேசன் ரேடிங் கம்பனி**
K. K. S. வீதி, இணுவில்.

**மணி மாமா பேக்கரி**
இணுவில்

**ஆவர்த்தி ரெக்ஸ்**
மத்திய சந்தை, சுன்னாகம்.

**சிறீ விநாயகர் ஸ்ரோர்ஸ்**
இணுவில் தெற்கு, இணுவில்.

**வெஸ்கோ கோப்பி & ரீ பார்**
திருநெல்வேலி.

**ஏசியன் புடைவையகம்**
பலாலி வீதி, திருநெல்வேலி.

**சார்தி அச்சகம்**
K. K. S. வீதி யாழ்ப்பாணம்.

**சுந்தர்சன்**
சந்தை முன்புறம், மானிப்பாய்.

**வே. சி. ம. களஞ்சியம்**
மானிப்பாய்.

**கு. கனகரத்தினம்**
இணுவில் தெற்கு, இணுவில்.

**பிள்ளையார் ஸ்ரோர்ஸ்**
ஸ்ரேஷன் றோட், சுன்னாகம்.

**ஹரன் கூல் பார் (புவி)**
சுன்னாகம்

**லக்கி கல்வி நிலையம்**
கட்டுடை, கிளை: தெட்டிலடி

**ஐடியல் கல்வி நிலையம்**
மானிப்பாய்

**எவரெஸ்ற் கல்வி நிலையம்**
இணுவில்.

சுப்பையா பொன்னம்பலம்
**அண்ணா தொழிலகம்**
இணுவில்


# தமிழும் சைவமும் செழிப்புற

# இணுவை இந்து உழைக்கட்டும்!

இசை மலிந்த புண்ணிய பூமி இணுவையம்பதி. இம் மருத நில மண்ணிலே மலர்ந்த மாசற்ற தேசுற்ற மலர்கள் இரண்டு. ஒன்று சைவம எனும் ஆன்ம ஈடேற்ற ஔடதம். மற்றையது தமிழ் எனும் தேனினுமினிய நம் மொழி. இவை இரண்டும் பொலிவுற விளங்கிய இம் மண்ணிலே கலங்கரை விளக்கென கேடில் விழுச் செல்வத்தை வாரி வழங்கிய கல்விக்கூடம் இணுவில் சைவப்பிரகாச மகாவித்தியாலயம். ஈழத்துத் திருவாரூர் எனும் இணுவையம்பதியிலே தேவாலயங்களில் ஒலிக்கும் மணியோசை இசை, வேதியர் கூடி ஓதும் வேத இசை, இசைவேளாளர் எழுப்பும் நாதஸ்வர இசை, தோல் நரம்பு இசைக் கருவிகள் தரும் மிடுக்கு மென்நாத இசைகள் யாவும் காற்றிற் கலந்து உள்ளத்தைக் கழுவி உவகையைத் தந்து நிற்கும்.

''ஆசை தரும் கோடி அதிசயங்கள் கண்டதிலே
ஓசை தரும் இன்பம்
உவமையிலா இன்பம்

என்ற மகாகவி பாரதியின் வாக்கினை மெய்ப்பிக்கும் மண்ணின் கண்ணான கல்வியைப் பெற்றவன் யான். பாலர் வகுப்பிலிருந்து சிரேஷ்ட தராதரப் பத்திரம் பெறும் வரை எனை அணைத்து அணையா விளக்கென கற்றனைத்தூறும் அறிவை அள்ளிச் சொரிந்து இன்று புதிய பெயர் சூட்டப்படுவதும் இணுவில் இந்துவே!



இ. சுந்தரலங்கம்

மேலான நாயகனாம் ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் தென் திசையிலும், தேனூறு கிழவிக்கு வாயூறி நின்ற குமரக்கடவுளின் கோட்டம் குணதிசையிலும் வலிய அரண்களாகவமைந்த உறுதியினால் சைவமும் தமிழும் இணைந்து வளர வாய்த்ததே இணுவில் இந்துக்கல்லூரி.

*கல்விப் பணியின்*
*சிகரத்துக்கு ஏற்றியது*

மன்னும் இமயமலை எங்கள் மலையே என்பது பாரதியின் சங்க நாதம். வல்லமை தாராயோ இந்த வையகம் பயனுற வாழ்வதற்கே என்பதும் அவனது இதயநாதம். இவற்றையெல்லாம் கருத்திலேற்றிக் கண்ணிய வாழ்வு வாழ முற்பட்டால் கல்வியழகைப் பெற்றே வாழவேண்டும். இக்கேடில் விழுச்செல்வத்தை இணுவையம்பதி மட்டுமன்றி கோண்டாவில், தாவடி, உடுவில், சுதுமலை போன்ற நன்னகரங்களில் வாழும் பிஞ்சு உள்ளங்களின் கலையியல் கூடமாகவும் கட்டுரை வன்மைபெறும் பொய்கையாகவும் இக்கல்லூரி திகழ வேண்டும்.

கல்விப் பணியின் சிகரத்துக்கே என்னை ஏற்றிவைத்த ஒளிமுதல் இத்தொன்மை வாய்ந்த கல்லூரியே!

பொருப்பிலே பிறந்து தென்னன் மடியிலே தவழ்ந்த தமிழ்ப்பாவை எனும் எழில் இளநங்கை இணுவையம்பதியில் இலங்குசீர் பெறுக! மேன்மைகொள் சைவநீதி உலகெங்கும் விளங்குக, இத் தெய்வத் திருத்தொண்டுகள் யாவும் இணுவை இந்துவின் உந்தியில் உருப்பெறுவதாக! இணுவில் இந்துவின் புகழ் எட்டுத் திக்கும் எட்ட முரசு கொட்டட்டும்! ★

— இ. சுந்தரலிங்கம் —
யாழ். கல்விப் பணிப்பாளர்

## வாழ்த்துரைகள்

இணுவில் சைவப்பிரகாச மகா வித்தியாலயத்தின் பெயர் மாற்று விழாவும் பரிசளிப்பு விழாவும் இன்று இணைந்தே நடைபெறுவதை இட்டு எனது மகிழ்ச்சியையும் வாழ்த்துகளையும் தெரிவிக்கிறேன்.

இணுவை மக்களின் சைவநெறி பிறழாத பண்பும் சைவத்தைப் போற்றி வளர்ப்பதற்கு அவர்கள் ஆற்றிவரும் தொண்டும் எல்லா இடத்தில் உள்ள மக்களுக்கும் ஓர் எடுத்துக்காட்டாக அமைகின்றன.

வாழ்க இணுவில் இந்துக் கல்லூரி.
வளர்க இந்து சமயம்.

சு. இரத்தினராசா,
பிரதிக் கல்விப் பணிப்பாளர்,
உடுவில் கல்விக் கோட்டம்.

இணுவில் மக்களுக்கு ஒரு நீண்ட சமய, கலைப் பாரம்பரியம் உண்டு. சைவ சமயம் சிறந்து விளங்கும் இம் மண்ணிலே கலைஞர்கள் பலர் வாழ்கின்றனர். இத்தகைய பண்பாட்டு உரம் பெற்ற இணுவிலிலே இந்துக் கல்லூரி என ஒன்று அமைவது பொருத்தமானதேயாகும்.

இக் கல்லூரியின் அதிபராக என்னுடைய அன்புக்கும் மதிப்புக்குமுரிய மாணவன் திரு. எஸ். தம்பித்துரை அவர்கள் திகழ்வது எனக்கு இரட்டிப்பு மகிழ்ச்சியாகவுள்ளது.

இக் கல்லூரி எல்லா வகையான முன்னேற்றங்களையும் பெற்றுச் சிறப்புற்று விளங்க இறை ஆசியினை வேண்டுகிறேன். அதிபருக்கும் ஆசிரியப் பெரு மக்களுக்கும் மாணவர்களுக்கும் எனது வாழ்த்துக்கள்!

பேராசிரியர் கலாநிதி
அ. சண்முகதாஸ்.
தலைவர், தமிழ்த்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

செந்தமிழ் தன்னொடு சைவநெறி வளர்த்த நல்லை நகர் ஆறுமுகநாவலர் திருவுளப்பாங்கின் வண்ணம் தோற்றுவிக்கப் பெற்றது யாழ். இணுவில் சைவப்பிரகாச மகா வித்தியாலயம்.

அஃது பல சான்றோர்களையும் அருளாளர்களையும் கலை விற்பன்னர்களையும் உருவாக்கித் தனது நூற்றியிருபத்தொன்பதாண்டகவையில் தனது மாணவன் திரு. சுந்தரலிங்கம் அவர்களால் யாழ். இணுவில் இந்துக் கல்லூரியாகத் தரமுயர்ந்து பொலிவடைந்து நிற்கிறது. இக்கல்லூரி மேலும் மேன்மை பெற்றுயர்ந்திட வாழ்த்துகின்றோம்.

பண்டிதர் நா. இராசையா.
செயலாளர்
பாடசாலை அபிவிருத்திச் சபை,
பழைய மாணவர் சங்கம்.

# சுந்தரின் உள்ளத்தின் புதுமலர் இணுவில் இந்துக் கல்லூரி

ஈழத் திருநாட்டில் அந்நிய கலாசாரத்தின் ஊடுருவலால் தமிழும் சமயமும் நலிந்து கொண்டிருந்த 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இன எழுச்சியின் சின்னமாக உதித்து எழுந்தது இணுவில் சைவப் பிரகாச வித்தியாசாலை. தமிழ்ப் பாடசாலைகளையே காண முடியாத அக்கால கட்டத்தில் சைவத் தமிழ் வளர்ச்சியின் தந்தை ஆறுமுகநாவலரின் உந்துதலால் உதித்தது இப்பாடசாலை. அக்காலத்தில் இணுவிலின் பல பாகங்களிலும் திண்ணைப் பள்ளிகளை வைத்து இலவசக் கல்வித் தானம் செய்து வந்த கல்வித் தந்தையர்களின் பரோபகாரச் சிந்தையும், அற்ப சலுகைகளுக்காக அசைந்து கொடுத்து மதம் மாற மறுத்த இணுவை மக்களின் உறுதியான தன்மான உணர்வும் உந்த உருவெடுத்த இணுவில் சைவப் பிரகாச வித்தியாசாலை 1864 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 3 ஆம் திகதி நிறுவப்பட்டது.

1870ஆம் ஆண்டு அரச நன்கொடை பெற்றதோடு சிரேஷ்ட பாடசாலையாகவும் தரம் உயர்ந்தது. 1962 ஆம் ஆண்டு அரச பாடசாலையாகவும் பொறுப்பேற்கப்பட்டது. 1978 ஆம் ஆண்டு முதலாம் தரப் பாடசாலையாகத் தரம் உயர்த்தப்பட்டது. க. பொ. த. உயர்தர வகுப்புகளை நடத்துவதற்கான அனுமதியும் அப்போது கிடைக்கப் பெற்றது.

1993ஆம் ஆண்டு சித்திரை மாதம் 5ஆம் திகதி தொடக்கம் இணுவில் இந்துக் கல்லூரியென உயர்ந்து நிற்கின்றது. இக் கல்லூரியின் சிறந்த பழைய மாணாக்கரில் ஒருவரான சுந்தரத்

(6 ஆம் பக்கம் பார்க்க)

— சுந்தரம் தம்பித்துரை —
(B. A (Ceylon), Dip, in. Ed)
அதிபர், யா/ இணுவில் இந்துக்கல்லூரி


**இணுவை இசைக் கலைஞர்கள்**
✻ எழிசை எழில் பொங்க வாழ்த்துகிறார்கள் ✻
N. R. கோவிந்தசாமி புதல்வர்கள்
N. R. சின்னராசா புதல்வர்கள்
தட்சணாமூர்த்தி உதயசங்கர்
N. R. சுந்தரமூர்த்தி
N. R. புண்ணியமூர்த்தி
K. உதயநாதனும் சகோதரரும்


## ஆசியுரை

இணுவில் சைவப்பிரகாச வித்தியாசாலைக்கு இணுவில் இந்துக் கல்லூரி என்று பெயர்மாற்றம் செய்யப்பட்டுள்ளதை அறிந்தோம்.

நல்லதொரு பெயரைச் சூட எண்ணம் உதித்ததும் இறைவன் செயல் போலும். இணுவில் இந்துக் கல்லூரி நனிதே வளர்ந்தோங்க வேண்டுமென இறைவன் திருவருளை உளமார வேண்டி எல்லோருக்கும் எமது நல்லாசிகளை வழங்குகிறோம்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு
குருமஹா சந்நிதானம்
முதல்வர், நல்லை ஆதீனம்.

## வாழ்த்துரைகள்

கல்விக்கூடங்கள் பல இன்று தரத்தினாலும் ஈட்டிய பெறுபேறுகளினாலும் பெருமையடைவதை நாம் காணமுடிகிறது. இணுவில் கிராமத்தில் சைவ மகாஜனா வித்தியாலயம் மத்திய கல்லூரியாகப் பெருமைபெற்றது; சைவப்பிரகாச மகா வித்தியாலயம் தற்போது இணுவில் இந்துக் கல்லூரியாக உயர்த்தப்பட்டிருக்கிறது. இதனை உணர்வோடு பாராட்டுகிறோம்.

நன் மாணாக்கரை உருவாக்குவதோடு கல்வி வளர்ச்சியிலும், பண்பாட்டு வளர்ச்சியிலும் இக்கல்லூரி முன்னேற வேண்டும் என்று திருவருளைப் பிரார்த்திக்கிறேன்.

செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி,
தலைவர்
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.

இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையாரின் திருவருளால் 1864 ஆம் ஆண்டு தாபிக்கப் பெற்ற ஸ்ரீ சைவப் பிரகாச வித்தியாசாலை மகா வித்தியாலயமாகிய இன்று இந்துக் கல்லூரியாக உயர்ந்து விளங்குகிறது.

இக் கலைக் கோயில் செந்தமிழும் சைவமும் தழைத்தோங்கப் பணிபுரிவதாக! பல்லூழி காலம் நிலைபெற்று விளங்குவதாக! இக் கலைக் கோவில் உருவாக்கத்துக்கு மூலமான குருமணிகளின் திருவடிகளுக்கு இது சமர்ப்பணம்.

மூதறிஞர் அ. கதிர்காமநாதன்.
முன்னாள் அதிபர்.


இணுவை ஸ்ரீ பரராஜசேகரப்
பிள்ளையார் பெருந்துணையோடு
இணுவில் இந்துக் கல்லூரி பல்கலையும்
பொலிந்து வளம் சிறக்க வாழ்த்துகிறோம்.

**சிறீ காமாட்சி தேநீர்ச்சாலை**
திருநெல்வேலி

**டயமன் ரேடேர்ஸ்**
சுன்னாகம்

**தி. யோகராசா**
பழைய மாணவர் சங்கம்

**சிற்றி என்டர்பிறைஸ்சஸ்**
இணுவில்

**சிவலோகநாதன் & கோ**
யாழ்ப்பாணம்

**மா. விவேகானந்தன் (சின்னக்கிளி)**
இணுவில்

**A.T.C. கல்வி நிலையம்**
இணுவில்

**து. சிவராசா**
தொழிலதிபர்
இணுவில்

**இ. சற்குருநாதன்**
தொழிலதிபர்
இணுவில்

**நாதன் சகோதரர்**
சுன்னாகம்

**அ. செல்வநாயகம்**
தொழிலதிபர்
இணுவில்

**அளவெட்டி பல நோ. கூ. சங்கம்**
இணுவில்

**அண்ணா தொழிலகம்**
இணுவில்

**சாந்தி ரெக்ஸ்ரைல்ஸ்**
நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

க. இரத்தினம் தம்பித்துரை
**ஐங்கரன் அரிசி ஆலை**
இணுவில்


நன்றி நவில்கிறோம்

மலர் சிறப்புற உதவியோருக்கும், விளம்பரம் தந்த பெருமக்களுக்கும் நன்றி தெரிவிக்கிறோம்.

தி. ரவீந்திரநாதன்
(மலர்க்குழு சார்பில்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். மாவட்டத்தில்

# கல்வியை இடைநிறுத்துவோர் எண்ணிக்கை 30 சத வீதம்

யாழ்ப்பாணம், நவ. 10

யாழ். மாவட்டத்தில் பொருளாதாரக் கஷ்டத்தால் பாடசாலைகளில் கல்வி பெற முடியாது இடைநடுவில் கல்வியை நிறுத்துபவர்கள் எண்ணிக்கை 25 சதவீதத்துக்கும் 30 சத வீதத்துக்கும் இடையில் உள்ளது.

யாழ். கல்வித் திணைக்கள உயர் அதிகாரி ஒருவர் மேற்கண்ட தகவலை வெளியிட்டுள்ளார்.

யாழ். கல்வி அலுவலகத்துக்கு விஜயம் செய்த யுனிசெவ் அதிகாரிகளின் கேள்வி ஒன்றுக்கு பதில் அளிக்கையிலேயே அவர் இப்படித் தெரிவித்தார்.

கடந்த காலங்களிலும் பார்க்க பொருளாதார நிலை வீழ்ச்சியால் தற்சமயம் பாடசாலையை விட்டு விலகிச் செல்வோர் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த விவரத்தைக் கேட்டு யுனிசெவ் அதிகாரிகள் அதிர்ச்சி வெளியிட்டனர். (த-3)

## நேர்முகப் பரீட்சை

யாழ்ப்பாணம், நவ. 10

வடபிராந்திய சுகாதாரத் திணைக்களத்தில் கடமையாற்றும் கிராமிய சுகாதார உதவியாளர்கள், பயிலுநர் குடும்ப சுகாதார சேவையாளர்களாகத் தெரிவு செய்யப்பட உள்ளனர்.

இதற்கு விண்ணப்பித்த கிராமிய சுகாதார உதவியாளர்களுக்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 19ஆம் திகதி காலை 8–30 மணிக்கு வடபிராந்திய சுகாதார திணைக்களத்தில் நடைபெறும்.

நேர்முகப் பரீட்சைக்கு விண்ணப்பித்தவர்கள் பிறப்புச் சான்றிதழ், தேசிய அடையாள அட்டை, கல்விச் சான்றிதழ், கிராமசேவையாளர் சான்றிதழ், நிறுவனத் தலைவரின் நற்சான்றிதழ், அனுபவச்சான்றிதழ் ஆகிய ஆவணங்களின் மூலப்பிரதிகள் மற்றும் புகைப்படப் பிரதியுடன் அன்றைய தினம் சமுகமளிக்கும்படி வட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் கேட்டுக் கொண்டுள்ளார். (த-162)

UNIVERSITY OF JAFFNA PUBLICATION

**SHRIMP CULTURE**

BY
Dr. K. Chitravadivelu
is now available
for sale

Price: Rs. 140/-

Please contact the Assistant Registrar, Administration for your requirements.

- REGISTRAR.

University of - Jaffna.
08 - 11 - 1993
[சி-6338]

பல்கலைக்கழக அனுமதி:

## மாணவர் எண்ணிக்கை குறைய மேல்மட்ட வர்க்கமே காரணம்

பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை குறைக்கப்பட்டிருப்பதற்குக் காரணம், மேல்மட்ட வர்க்கத்தினராவர்.

பல்கலைக் கழகங்களின் மாணவர் சம்மேளனம் விடுத்த அறிக்கை ஒன்றில் இவ்வாறு குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இலவசக் கல்வியின் பயனை ஏழை மாணவர்கள் பெறுவதை நிறுத்துவதற்கு ஆரம்பத்தில் இருந்தே இந்த மேல்மட்ட வர்க்கத்தினர் பல்வேறு தந்திரங்களைக் கையாண்டு வருகின்றனர்.

பல்கலைக்கழக அனுமதி பெறும் மாணவரின் எண்ணிக்கையைக் குறைக்கும் முடிவும் அத்தந்திரத்தில் ஒன்றாகும்.

கடந்த ஆண்டிலும் பார்க்க பல்கலைக்கழக அனுமதி பெறும் மாணவரின் எண்ணிக்கை ஆயிரத்து 27ஆல் குறைந்துள்ளது. இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-எ)

## வவுனியா நகர புனரமைப்பு; அரசாங்கம் நடவடிக்கை

வவுனியா நகரத்தைப் புனரமைப்பதற்கான நடவடிக்கைகளில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பான முக்கிய மாநாடு கடந்த முதலாம் திகதி வவுனியா கச்சேரியில் நடைபெற்றது.

வவுனியா மாவட்டத்தின் அபிவிருத்திக்கென 16 கோடி 90லட்சம்ரூபாவும் கல்விக்காக 15 கோடி 30 லட்சம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளதாக இம்மாநாட்டில் தெரிவிக்கப்பட்டது.

இந்த மாநாட்டில் புனர்வாழ்வு புனர் நிர்மாணத் துறை அமைச்சர் பி. தயாரத்ன வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநர் நளின்செனவிரத்தினா, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜென்ரல் ஹமில்டன் வனசிங்கா, வன்னிப் பிரதேச இராணுவத் தளபதி பிரிகேடியர் களுபஹன ஆகியோர் கலந்து கொண்டனர். (த-3-9)

## தெஹிவளை பகுதியில் புயல்; 200 வீடுகள் சேதமாகின

கொழும்பு, நவ. 10

தெஹிவளை — கல்கிசைப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு வீசிய புயல் காரணமாக சுமார் 200 வீடுகள் சேதமடைந்தன.

அகதிகளுக்கு தற்காலிக இடவசதி மற்றும் உணவு வழங்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதேவேளை — பேருவளையில், கடலுக்கு சென்ற இரு படகுகள் புயலில் சிக்கி சேதமடைந்தன. படகுகளில் இருந்த ஏழு மீனவர்களில் நால்வரை காணவில்லை என்று பேருவளைப் பொலீஸ் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

இதற்கிடையில் — காலியில் இருந்து யாழ்ப்பாணம் வரையான மேற்குக் கடலோரப் பகுதி இன்று பற்பகல் வரை கொந்தளிப்பாக இருக்கும் என்று அறிவிக்கப்பட்டது. (ஓ-எ)

## விவசாயிகளுக்கு 2 மாத ஓய்வூதியம்

யாழ்ப்பாண, நவத் 10

யாழ். மாவட்டத்தில் உள்ள விவசாய ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் ஓய்வூதியம் பெறும் விவசாயிகளின் 1993 ஐப்பசி, கார்த்திகை மாதங்களுக்கான ஓய்வூதியக் கொடுப்பனவு நாளை வியாழக்கிழமை நல்லூரிலுள்ள கமத்தொழில் காப்புறுதிச் சபை மாவட்டக் காரியாலயத்தில் வழங்கப்படவுள்ளது.

சம்பந்தப்பட்டவர்கள் தமது கொடுப்பனவை உடனடியாகப் பெற்றுக் கொள்ளுமாறு கமத்தொழில் காப்புறுதிச் சபை உதவிப் பொறுப்பாளர் திரு. க. சுந்தரசன் கேட்டுள்ளார். (ஒ)

## வீதி திருத்தத்திற்கு நிதி ஒதுக்கீடு

கொழும்பு, நவ. 10

வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் பிரிவில் 6 வீதிகளை அபிவிருத்தி செய்ய 7 லட்சத்து 50 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக கொழும்புச் செய்தி ஒன்று தெரிவித்தது.

இதில் சுழிபுரம் மத்தியில் உள்ள கம்பனை அம்மன் வீதிக்கு 75 ஆயிரம் ரூபாவும், சங்கானை மேற்கு மறவை தொட்டிலடி வீதிக்கு 75 ஆயிரம் ரூபாவும், வட்டு. மேற்கு மூளாய் 4ஆம் ஒழுங்கைக்கு 75 ஆயிரம் ரூபாவும் அராலி மேற்கு நொச்சி, காடு முதலாம் ஒழுங்கைக்கு 75 ஆயிரம் ரூபாவும், சுழிபுரம் பறாளாய் வீதிக்கு 1 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவும், அராலி தபாற்கந்தோர் செட்டியார் மட வீதிக்கு [illegible] பட்டுள்ளது. (த-க)

தமிழ் சாகித்திய விழா - 1994

**சிறந்த நூலுக்கு பரிசளித்தல்**

1992 ஜனவரி 1ஆம் திகதி முதல் 1992 டிசம்பர் 31 ஆம் திகதி வரை (இரு தினங்களும் உட்பட) வெளியிடப்பட்ட நூல்களின் ஆசிரியர்கள், வெளியீட்டாளர்களிடமிருந்து சாகித்திய நூற்பரிசுத் தேர்வுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. நூலாசிரியர் இலங்கையராய் இருப்பதுடன், நூல் இலங்கையில் அல்லது இந்தியாவில் பிரசுரிக்கப்பட்டதாகவும் இருத்தல் வேண்டும்.

பரிசுத் தேர்வுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் தமது நூல்களின் ஐந்து பிரதிகளை அஞ்சல் மூலம் அல்லது நேரடியாக 1993 நவம்பர் 26 ஆம் திகதிக்கு முன்னர் சேர்ப்பிக்கும்படி வேண்டப்படுகின்றனர். இத்திகதிக்குள் நூல்களை அனுப்ப முடியாதவர்கள் தமது நூல்கள் பற்றிய விவரங்கள் அடங்கிய கடிதத்தையாவது 1993 நவம்பர் 26ஆம் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் அனுப்பி வைத்தல் வேண்டும். பின்னர் 1993 டிசம்பர் 30 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக நூல்களை அனுப்பி வைத்தல் வேண்டும்.

க. சண்முகலிங்கம்,
பணிப்பாளர்,
இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்.

9 ஆவது மாடி,
'தக்ஷணமந்திரய',
21, வொக்ஷோல் வீதி,
கொழும்பு – 02
(சி/[illegible])

## உலகிலே மிக உயரமான மனிதருக்கு முதுகு வலி!

கட்டார், நவ. 10

உலகிலே மிகவும் உயரமான மனிதர் ஒருவர் முதுகு வலி காரணமாக பஹ்ரைனில் உள்ள பனாமா மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

8 அடி 3 அங்குலங்கள் உயரமான அந்த நபர் பாகிஸ்தானைச் சேர்ந்த முகமது ஆலம்கான் ஆவார்.

மருத்துவமனையில் இவருக்கு இரண்டு கட்டில்கள் வழங்கப்பட்டன என்று கட்டார் செய்தி ஸ்தாபனம் அறிவித்தது. (இ-எ)

ஜனாதிபதித் தேர்தல்:

## ஐ.தே.க. வேட்பாளராக விஜேதுங்கா போட்டி

கொழும்பு, நவ. 10

அடுத்த ஆண்டு நடைபெறும் ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளராக தற்போதைய ஜனாதிபதி விஜேதுங்காவையே அக்கட்சி நியமிக்க உள்ளது.

இம் மாதம் 14ஆம் திகதி நடைபெறும் கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் இம் முடிவு உத்தியோக பூர்வமாக எடுக்கப்படும் என "லங்காபுவத்" தெரிவித்தது.

செயற்குழுவின் முடிவுக்கு எதிர்வரும் டிசம்பர் முற்பகுதியில் நடைபெறவிருக்கும் கட்சியின் வருடாந்த மாநாட்டில் அங்கீகாரம் பெறப்படும் என்றும் அறிவிக்கப்படுகிறது.

## மாநகரசபை ஊழியருக்கு நிரந்தர நியமனக் கடிதம்

யாழ். மாநகரசபையின் தற்காலிக ஊழியர்கள் 100 பேருக்கு நிரந்தர நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டன.

யாழ். நாவலர் மண்டபத்தில் இதற்கென ஒழுங்கு செய்யப்பட்ட வைபவம் ஒன்றில்வைத்து இவர்களுக்கான நியமனக் கடிதங்களை யாழ். மாநகரசபை ஆணையாளரும், சுகாதார வைத்திய அதிகாரியும் வழங்கினார்கள்.

இவர்களில் நூலக உதவியாளர்கள் 4 பேரும், வேலை மேற்பார்வையாளர்கள் 4 பேரும், சாரதிகள் 2 பேரும், தொழிலாளிகள் 90 பேரும் அடங்குவர். (இ–162)

## மல்லாகத்தில் புதிய பாதை திறக்க நடவடிக்கை

ஏழாலை, நவ. 10

மல்லாகம் நீலியம்பனை குளத்திலிருந்து நொச்சிக் குளம் வரையான பகுதியில் புதிய பாதை ஒன்றை திறக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இப்பாதையினால் பெரும்பாலான விவசாய நிலங்களுக்கு போக்குவரத்து வசதியும், பொதுமக்கள் மல்லாகத்தில் இருந்து கந்தரோடை வீதியைச் சென்றடைவதற்கு வழியும் ஏற்பட்டுள்ளது.

இதற்கான முன்னோடி வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு உள்ளன. பாதைக்கான இடம் நில அளவை செய்யப்பட்டு பாதையைச் செப்பனிடுவதற்கான வேலைகள் நடைபெற்று வருகின்றன. (த-45)

தஞ்சாவூரில் டிசெம்பர் 25இல்

## எட்டாவது அனைத்துலக தமிழாராய்ச்சி மாநாடு

தஞ்சாவூர், நவ. 10

எட்டாவது அனைத்துலக தமிழாராய்ச்சி மாநாடு தஞ்சாவூரில் டிசெம்பர் மாதம 25ஆம் திகதி தொடக்கம் 10 நாட்கள் நடைபெறும்.

தஞ்சாவூரில் உள்ள தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் அவ்வை நடராசன் இதை அறிவித்துள்ளார்.

இலங்கையில் வாழும் தமிழாராய்ச்சி அறிஞர்களை இந்த மாநாட்டில் தமது ஆராய்ச்சிக் கட்டுரைகளை அரங்கேற்றுமாறு தமிழாராய்ச்சி மாநாட்டின் இலங்கைக் குழு கேட்டுள்ளது.

கட்டுரைத் தலைப்பு முதலிய விவரங்களை நவம்பர் 15க்கு முன்னரும் முழுமையான கட்டுரையை நவம்பர் 30க்கு முன்னரும் அனுப்ப வேண்டும். என அறிவிக்கப்பட்டுள்ளது. (க)

## ஏனைய பகுதிகளிலும் கொலரா பரவுகிறது

இதுவரை அகதி முகாம்களில் பரவிவந்த கொலரா நோய் தற்போது கிராமங்களிலும் பரவுகிறது.

யாழ். மாவட்டத்தில் உள்ள சுகாதார வைத்திய அதிகாரிகள் நடத்திய வாராந்த செய்தியாளர் மாநாட்டில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் 206 பேரும், சாவகச்சேரியில் 100 பேரும், மானிப்பாயில் 75 பேரும், கோப்பாயில் 49 பேரும், தெல்லிப்பளையில் 41 பேரும், பருத்தித்துறையில் 2 பேரும் கொலராவினால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (க–162–117)

வீட்டு விறாந்தையில் கிடந்த

## உடுபுடைவையை திருடிய நபருக்கு ரூபா 700 அபராதம்

யாழ்ப்பாணம், நவ. 10

ஆயிரத்து நூறு ரூபா பெறுமதியான உடுபுடைவைகளை வீட்டு விறாந்தையில் இருந்து திருடியவருக்கு 700 ரூபா அபராதம் அல்லது இரண்டரை மாத கட்டாய சமூகசேவை செய்யுமாறு யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றில் கடந்த திங்கட்கிழமை தீர்ப்பு அளிக்கப்பட்டது.

சிறுப்பிட்டியைச் சேர்ந்த ஐயாத்துரை யோகச்சந்திரன் என்பவரே இந்தத் திருட்டுச் செயலை மேற்கொண்டதாக குற்றஞ் சாட்டப்பட்டிருந்தார்.

[illegible]யாளர்கள் சுடர், ஜேம்ஸ், மயூரன் ஆகியோர் முன்னிலையில் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்பட்ட மேற்படி நபர் குற்றத்தை ஒப்புக் கொண்டதனால் தமிழீழ சட்டக்கோவை பிரிவு 1 இன் பிரகாரம் இவ்வாறு தீர்ப்பளிக்கப்பட்டது.

கோண்டாவிலைச் சேர்ந்த கதிர்காமநாதன்மேகலா என்பவரது வீட்டிலிருந்தே புடைவைகள் களவாடப்பட்டிருந்தன. களவாடப்பட்ட புடைவைகள் அனைத்தும் தமிழீழ காவல்துறையினரால் புத்தூர் மேற்கு நவக்கிரிப் பகுதியில் இருந்து மீட்டெடுக்கப்பட்டு உரிமையாளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. (ஓ-162)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

5 K. V. மின்வலு வுள்ள ஜெனரேற்றர் ஒன்றும் டீசல், Panasonic V. D. O. Mixer ஒன்றும் (WJ-MX-10) விற்பனைக்குண்டு. பார்வையிடும் நேரம் காலை 9 தொடக்கம் 12 மணிவரை. ரெலிகோணர், நவீன சந்தை, (மேல்மாடி) சாவகச்சேரி. (6583)

பல நோக்குக் கூட்டுறவுச் சங்க ஒழுங்கை திருநெல்வேலி வடக்கில் சந்தைக்கு மிக அருகாமையில் சகல வசதியும் கொண்ட இரண்டு பரப்பு காணியும், வீடும் விற்பனைக்குண்டு. தொடர்பு: திருமதி. வனிதாதேவி விவேகானந்தம், செம்பாட்டுலேன், பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில். (27931)

## திருத்தவேலைகள்

உத்தரவாதத்துடன் மணிக்கூடுகள், றேடியோக்கள் திருத்தப்படும். உதிரிப்பாகத்திற்காக மணிக்கூடுகள் வாங்கப்படும். டில்கா வாச் & றேடியோ வேக்ஸ், 284, ஸ்ரான்லி றோட் (வானவில் அருகில்). கிளை: கண்டி றோட், சாவகச்சேரி. (சி-6176)

## தோத்திரங்கள்

அருட்கவி சீ. விநாசித்தம்பி புலவர் பாடிய ''ஸ்ரீநாராயணப் பெருமான் 108 திருத்தல தோத்திரங்கள்'' [ஆழ்வார்கள் பாடிய தோத்திரங்களும் அடங்கிய] நூல் விற்பனையாகிறது. விலை 60/- பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். (சி-6337)

## தவறிவிட்டது

6-11-93 இல் கொழும்பிலிருந்து கிளாலிக்கு வந்த டிராக்டரில் முக்கிய ஆவணங்கள் அடங்கிய கைப்பை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து க. குமாரசுவாமி, வலம்புரி ரெக்ஸ், நெல்லியடி என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும். சி. சிவக்கொழுந்து பெரியதோட்டம், கரவெட்டி மத்தி, கரவெட்டி. (27961)

## O/L வினா - விடை

உயர் கல்விச்சேவை நிலைய கடந்தகால வினாவிடையும், அப்பியாசக் கொப்பிகளும் மலிவு விலையில் விற்பனையாகின்றன. அறிவகம் புத்தகசாலை, வெலிங்டன் சந்திக்கு அருகில், யாழ்ப்பாணம். (சி-6533)

## விண்ணப்பப்படிவம்

வவுனியா கல்விக் கல்லூரிக்கான படிவம் விற்பனையாகின்றது. நாயகபாலன் புத்தகக் களஞ்சியம், மானிப்பாய். முழுவிவரமும் எம்மிடம் பார்வையிடலாம். (6590)

## இன்று சனி மாற்றம்

31-5-95 வரை கும்பராசியிலேயே சஞ்சரிக்கும் சனி ஒரு வருடத்திற்கு வியாழனின் சுபபார்வையைப் பெறுகிறது. வியாழன், சனி மாற்றமும், சத்யாவின் எண்ஜோதிடமும் ரூபா 10/. கனகா ரேடர்ஸ், திருநெல்வேலி. (27971)

---

# முதலாவது பிறந்ததின வாழ்த்து

**10 — 11 — 1993**

## செல்வன் சோ. சக்திதரன்

மட்டுவில் தெற்கு, வேரற்கேணி கந்தசுவாமி கோயில் பிரதமகுரு
சோமாஸ்கந்தக் குருக்கள் - பிருந்தா
தம்பதிகளின் செல்வப் புதல்வன் சக்திதரன் தனது முதலாவது பிறந்தநாளை இன்று வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார்.

சக்தியை அப்பா, அம்மா, பாட்டி, பெரியப்பா, பெரியம்மா, மாமாமார், மாமிமார், அத்தைமார், சித்தி, அண்ணா ஹரன், தம்பி மோகன் சகல செல்வங்களும் பெற்று, கந்தன் அருளால் நீடூழி வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

(27962)

---

# யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி

## ஆண்டு 6 அனுமதி

மேற்படி வகுப்புக்கு அனுமதி பெற விரும்புவோர் அலுவலகத்தில் ரூபா 10 செலுத்தி விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுப் பூர்த்தி செய்து 30-11-1993க்கு முன்னர் ஒப்படைக்கவும்.

— அதிபர்.

(சி-6340)

---

# கவின் கலைகள் பயிலகம்

**SCHOOL OF FINE ARTS**

238, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

## புதிய மாணவரைச் சேர்த்தல்-1994

நடனம், வாய்ப்பாட்டு, வயலின், வீணை, மிருதங்கம், புல்லாங்குழல், சித்திரம், கிட்டார், ஓர்கன்.

ஆகிய வகுப்புக்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**10 — 11 — 1993** முதல் அலுவலகத்தில் விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

நிறைவு திகதி: **30 — 11 — 1993**

அதிபர்,
திருமறைக் கலா மன்றம்.

(சி-6341)

---

அரிய சந்தர்ப்பம்!

# தீபாவளி மலிவு விற்பனை

நவம்பர் 1 ஆம் திகதி முதல்
12 ஆம் திகதி வரை

சகலவிதமான
கைக்கடிகாரங்கள், சுவர்மணிக்கூடுகள்
முதலியன மலிவு விலையில்
பெற்றுக் கொள்ளலாம்.

## அல்டி

269/1, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-6518)

---

உ
சிவமயம்

# திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான ஸ்ரீமுகவருடம் ஐப்பசி மாதம் 26 ஆம் நாள் (11-11-1993) வியாழக்கிழமை காலை 8-10 மணிமுதல் 10-40 மணி வரையுள்ள சுபமங்கள வேளையில்,

திரு. திருமதி தவராசன்
தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வன்
**தேவன்**
அவர்களுக்கும்

திரு. திருமதி பொன்னுத்துரை
தம்பதிகளின் புதல்வி
**சந்திராதேவி**
அவர்களுக்கும்

திருவருள் துணைகொண்டு கொழும்பு - 3 சசகாவ மண்டபத்தில் திருமணம் நடைபெறும் என்பதை அறியத் தருகின்றோம்.

இங்ஙனம்:

திரு. திருமதி தவராசன்,
25/10, B. M. C. லேன்,
மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

திரு. திருமதி தவராசன்,
29/1, கிளிபோட் வீதி,
கொழும்பு-3

தனிப்பட்ட அழைப்பிதழ் அனுப்பமுடியாமைக்கு மன்னிக்கவும்.

---

# சோஷலிஸ அம்சங்களை வரவேற்கிறார் பாப்பரசர்

ரோம், நவ. 10
சோஷலிசத்தில் சில நல்ல அம்சங்கள் உள்ளன. அவற்றை அழித்து விடக்கூடாது.

பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியில் பரிசுத்த பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பர் முன்கண்டவாறு தெரிவித்தார்.

கட்டுப்பாடற்ற முதலாளித்துவத்தை பாப்பாண்டவர் கண்டித்தார்.

கம்யூனிஸத்தில் ஏராளமான தவறுகள் இருப்பினும் அதில் சாதகமான நல்ல அம்சங்களும் உள்ளன என்றும் பாப்பாண்டவர் சொன்னார்.

கம்யூனிஸத்தின் வீழ்ச்சியினால் மேற்கு நாடுகளிலும் பார்க்க கிழக்கு ஐரோப்பாவின் இழப்புகள் அதிகமானவை.

''வேலையில்லாத் திண்டாட்டம் மற்றும் வறிய மக்களின் நலன்களுக்காக கம்யூனிஸம் அடைந்த சாதனைகளை தீவிரமுதலாளித்துவத்தைப் பேணுபவர்கள் கவனிக்க மறுத்து விடுகின்றார்கள்''— என்றும் பாப்பாண்டவர் கூறினார்.

(உ-எ)

---

# கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மாணவனும், யூனிவேர்சல் கல்வி நிலைய மாணவனுமான செல்வன்
பா. கிரிதரன் அவர்களின் தந்தையாரான

## வேலாயுதபிள்ளை பாலசுப்பிரமணியம்

(வர்த்தகர்)

அவர்கள் இறைபதம் அடைந்ததை இட்டு எமது கண்ணீர் அஞ்சலிகளைக் காணிக்கை ஆக்குகின்றோம்.

அன்னாரது பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்கள்.

யூனிவேர்சல கல்வி நிலைய
ஆண்டு 11 மாணவர்களும்,
இயக்குநர், ஆசிரியர்களும்.

(சி-6339)

---

# 31ஆம் நாள் நினைவலைகளும் அந்தியேட்டி அழைப்பும்



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 06 | 14 |
| 08 | 10 |
| 1946 | 1993 |

## திருமதி சர்வாஜினிதேவி கந்தையா

(நெசவு போதனாசிரியர், மாலிசந்தி)

எங்கள் குடும்பத் தலைவியின் 31ஆம் நாள் நினைவஞ்சலியும், அந்தியேட்டி சபிண்டீகரண கிரியைகளும் நாளை (11 - 11 - 1993) வியாழக்கிழமை காலை அன்னாரது இல்லத்தில் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் இதில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

அன்னாரது மறைவின் போது எமது துயரில் பங்கேற்றோருக்கும், பல வழிகளிலும் உதவி புரிந்தோருக்கும் எமது நன்றியறிதலை தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

பிரிவால் துயருறும்:
சி. வ. கந்தையா
(கணவர்)

புலோலி மேற்கு,
பருத்தித்துறை.

(6591)

---

# ஈராண்டு நினைவலைகள்



| மலர்வு: | உதிர்வு: |
|---|---|
| 18 | 02 |
| 05 | 11 |
| 1942 | 1991 |

## திருமதி நல்லம்மா சின்னத்தம்பி

திதி: 10 — 11 — 1993

ஈராண்டுகளில் எம்மாதாவைப் பிரிந்து காரிருளில் மூழ்கி கலங்குகின்றோம். பாரினிலே நெஞ்சார்ந்த நினைவுகளை நீர் விழியாலே கரைத்து பஞ்சாகிப் போனோமம்மா.

கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், சகோதரர்,
மைத்துனர்மார், மைத்துனிமார்.

அல்லிப்பளை,
பளை.

[27903]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## ஆபத்து மதத்திற்கும் தான்

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள் அண்மையில் தென்னிலங்கையில் சீதுவ என்ற இடத்தில் — பொலீஸாரால் தடுத்து வைக்கப்பட்டுப் பின்னர் விடுவிக்கப்பட்டார். இது குறித்து விசாரிப்பதற்கு ஆணைக்குழு ஒன்றை நியமிக்குமாறு யாழ். இந்து சமயப் பேரவை அரசாங்கத்திடம் கோரியுள்ளது.

இந்து மதத் தலைவர் ஒருவருக்கே இத்தகைய நிலை என்றால் சாதாரண இந்து மக்களின், தமிழ் மக்களின் நிலை எவ்வாறாக இருக்கும் என்ற கேள்வியையும் பேரவை எழுப்பியுள்ளது.

இந்தக் கேள்வி ஆழமாக நோக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

எந்த மதத்தைச் சேர்ந்தவரும் தமது மதகுருக்களுக்கு மதிப்பளித்து மரியாதை செய்வது மரபு. தங்கள் மதகுரு அவமதிக்கப்பட்டால் அல்லது ஏதோ ஒரு விதத்திலேனும் இம்சிக்கப்பட்டால் அதனைத் தமது மதத்துக்கு ஏற்பட்ட அவமானமாகக் கருதுவர்.

மதம், மொழி தொடர்பான மனித உணர்வுகள் மிகவும் மென்மையானவை. அவற்றை அடுத்தவர்கள் தீண்டிப்பாதிப்புறச் செய்தால் மக்கள் விரைவில் உணர்ச்சிவசப்படுவதுண்டு. அது மத மொழிச் சண்டைகளுக்கு வழிகோலும்.

இலங்கையில் சிங்கள - பௌத்த பேரினவாதம் சிறுபான்மை இன மக்களின் மொழி, மதம் என்பவற்றைச் சீண்டி வருகிறது. இந்த நாட்டில் வாழும் ஏனைய மக்கள் அனைவரும் சிங்களவருக்கும் பௌத்தருக்கும் அடிபணிந்து வாழ வேண்டும் என்ற எண்ணம் மட்டும் அவர்களுக்கு இல்லை. ஏனைய மொழியினரை மதத்தினரை ஒழித்துக்கட்டி விட்டு, சிங்களமும் பௌத்தமுமே மேலோங்கி நாடு முழுவதும் பரவி, விரவி, வளரவேண்டும் என்பது அவர்களின் அடிப்படைக் கொள்கை அதனையே ''ஜாதிக சிந்தனய'' போன்ற தீவிரவாத அமைப்புகள் தமது அடிப்படைத் தத்துவமாகவும் கொண்டுள்ளன.

இவற்றின் தன்னிகரில்லாத் தலைவனாக விளங்குகிறார் விஜேதுங்கா. டி. எஸ். முதல் பிரேமதாசா வரையான முந்திய தலைவர்களை மிகக் கீழே தள்ளிவிட்டு, ஒரு கை பார்க்கிறேன் என்று சாதனை படைக்கத் துடிக்கிறார். பயங்கரவாதத்தை ஒழிப்பது என்ற பேரில் தமிழர்களை அழிக்க இராணுவத்துக்கு உத்தரவிட்ட அவரது ஆட்சியில் சாதாரண தமிழர்கள் என்றால் என்ன, இந்து மதக் குருமார் என்றால் என்ன, எல்லோரும் ஒன்றே!

பௌத்த மத குரு ஒருவரை அவர் தனக்குரிய அங்கியுடன் விகாரையில் நடக்கும் நிகழ்வுக்குச் செல்லும் வழியில் பொலீஸார் சீண்டுவார்களா? இல்லை. அவரின் பாதத்தில் தொட்டுவணங்கி ஆசி வேண்டுவார்கள். ஆனால் இந்துமதத் துறவியோ அவர்களுக்கு சந்தேகத்துக்குரியவராகத் தெரிந்திருக்கிறார்! தமிழர்களே சந்தேகப் பிராணிகள் என்ற நிலை வந்த பின்னர் இது போன்ற சம்பவங்கள் எதிர்பார்க்க முடியாதவை அல்ல.

அதேபோல, தமிழர்களைச் சந்தேகப் பிராணிகளாகப் பார்க்கும் அரசு நல்லை ஆதீன முதல்வர் கைது செய்யப்பட்டது குறித்து விசாரணை எதனையும் நடத்தும் என்றும் எதிர்பார்ப்பதற்கில்லை.

வடக்கில் உள்ள ஆலயங்களை வானத் தாக்குதல் மூலம் அழித்து வரும் அரசின் நோக்கம் என்ன? ஆலயங்களில் பூசை, வழிபாடு நடக்காவண்ணம் பிடித்து வைத்திருப்பது ஏன்? சைவசமயத்தை ஒழித்துவிட வேண்டும் என்பதல்லாமல் வேறு எதுவும் இல்லை.

எனவே தமிழர் மீதான அடக்குமுறை இனம் சம்பந்தப்பட்டது மட்டும் அல்ல. மதம் சம்பந்தப்பட்டதுமாகும். தமிழ் இனமும், சைவ மதமும் வாழ வேண்டுமானால் தமிழர் விடுதலைக்காகப் போராடுவதைத் தவிர வேறு வழியே இல்லை.

## பாராட்டு விழா

யாழ்ப்பாணம், நவ. 10

இளைப்பாறிய அதிபரும், சைவப்பெரியாரும், சமூகத் தொண்டருமான உயர்திரு. வை. கதிர்காமநாதனின் பாராட்டு விழா நாளை வியாழன் மாலை 5 மணிக்கு இணுவில் ஸ்ரீ பரராசசேகரப் பிள்ளையார் கோவில் கல்யாண மண்டபத்தில் நடைபெறும். (த)

## பாக். நாடாளுமன்ற கட்டடத்தில் தீ!

இஸ்லாமபாத், நவ. 10

இஸ்லாமபாத்தில் உள்ள பாகிஸ்தான் நாடாளுமன்றக் கட்டடத்தில் நேற்று தீப்பிடித்தது. இதற்கான காரணம் தெரியவில்லை. தீயணைப்புப் படையினர் இராணுவத்தின் உதவியுடன் தீயை அணைப்பதில் ஈடுபட்டிருந்தனர். (உ-6)

## சந்திப்பு

யாழ்ப்பாணம், நவ. 10

யாழ். மாவட்டத்திலுள்ள ஒலிப்பதிவு நாடா, ஒளிப்பதிவு நாடா விநியோகஸ்தர்கள், மற்றும் பதிவு செய்பவர்கள் ஆகியோருடனான சந்திப்பு ஒன்று நாளை வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கோண்டாவிலில் உள்ள யாழ். மாவட்டச் செயலகத்தில் நடைபெறும்.

மேலே குறிப்பிட்ட துறையைச் சேர்ந்த அனைவரையும் இதில் கலந்துகொள்ளுமாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினர் கேட்டுக்கொண்டுள்ளனர் (த)

## ''பசுமை'' திறப்பு விழா

யாழ்ப்பாணம், நவ. 10

யாழ். மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால் அனைத்து விவசாயிகளினதும் நன்மை கருதி ''பசுமை'' எனும் விவசாய சேவை நிலையம் ஒன்று இன்று புதன்கிழமை கோண்டாவில் சந்திக்கு அண்மையில் திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்த விவசாய சேவை நிலையத்தில் விவசாயிகளுக்குத் தேவையான உரம், கிருமிநாசனி வகைகள், விதை தானியங்கள், பழ மரக் கன்றுகள் என்பவற்றைப் பெற்றுக் கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டது. (ஒ)

## ராஜீவ் கொலைச் சம்பவம் பற்றிய விசாரணை:

# ஜெயின் ஆணைக்குழுமுன் ஆஜராக வி.பி.சிங், கருணாநிதிக்கு அழைப்பு

### வை. கோபாலசாமி, சுப்புலட்சுமி ஜெகதீசனுக்கும் 'சம்மன்ஸ்'

சென்னை, நவ. 10

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலைச் சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்தி வரும் நீதியரசர் ஜெயின் தலைமையிலான விசாரணை ஆணைக்குழு, தம்முன் சாட்சியமளிக்க வருமாறு முன்னாள் பிரதமர் வி. பி. சிங், முன்னாள் தமிழக முதலமைச்சர் மு.கருணாநிதி உட்பட ஏழு பேருக்கு அழைப்பாணை அனுப்பியுள்ளது.

தி. மு. கழக எம். பியா வை. கோபாலசாமி, முன்னாள் மாநில அமைச்சர் சுப்புலட்சுமி ஜெகதீசன், முன்னாள் மாநில உள்துறை அமைச்சுச் செயலாளர் ஆர். நாகராஜன், தமிழ் தேசியக் கட்சித் தலைவர் ப.நெடுமாறன், மற்றும் தமிழ்நாடு பொலிஸின் முன்னாள் உளவுப் பிரிவுத் தலைவர் ஜாபர் அலி ஆகியோர் அழைப்பாணை பெற்ற ஏனையோர் ஆவர்.

ஜெயின் ஆணைக்குழுவின் அடுத்த விசாரணை இம்மாதம் 16 ஆம் திகதி நடைபெறும் போது குழுவின் முன் நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமோ தெரிபடும்படியும் அவர்கள் கோரப்பட்டுள்ளனர்.

ராஜீவ் கொலையில் சதித்திட்டம் சம்பந்தப்பட்டுள்ளதா என்ற அம்சம் குறித்து ஜெயின் ஆணைக்குழு விசாரணை நடத்துகிறது.

இந்த ஏழு பேருக்கும் ஆணைக்குழு சம்மன்ஸ் அனுப்பியிருப்பது அவர்களின் புகழுக்கோ, நடத்தைக்கோ எவ்வகையிலும் பங்கம் விளைவிக்காது என்றும் —

சாட்சியங்கள் அளிப்பதன் மூலம் தங்களது நலன்களைப் பாதுகாத்துக் கொள்ளும் நிலையை அவர்களுக்கு ஏற்படுத்துவதற்கான நியாயமான முழு வாய்ப்பு அளிப்பதே இதன் நோக்கம் என்றும் — புதுடில்லியில் ஜெயின் ஆணைக்குழு வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-எ)

## மாணவருக்கு இலவச கண்ணாடி

யாழ்ப்பாணம், நவ. 10

வசதியற்ற — கண்பார்வை குறைந்த—பாடசாலை மாணவர்களுக்கு இலவச மூக்குக் கண்ணாடிகளை வழங்க நடவடிக்கை எடுப்பதற்கு வசதியாக—

பாடசாலை அதிபர்கள் தங்கள் பாடசாலையில் கண் பார்வை குறைந்த மாணவர்களின் கண்பரிசோதனை அறிக்கைகளை சேகரித்து தமது சிபார்சுடன் எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர் யாழ். கல்வித் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கும்படி யாழ். கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (த)

# கருணாநிதி - கோபாலசாமி சுமுகத் தீர்வுக்கு வழியில்லை

சென்னை, நவ. 10

தி. மு. க. தலைமைக்கும் வை. கோபாலசாமிக்கும் இடையே ஏற்பட்டுள்ள கருத்துவேறுபாட்டுக்கு சுமுக தீர்வு காணவழியே கிடையாது என்று இருதரப்பினரும் கூறியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

கோவையில் நேற்று தி.மு.க. தலைவர் கருணாநிதி செய்தியாளர்களிடம் பேசிய போது—

தி. மு. க. தலைமைக்கும் கிளர்ச்சியாளர் கோபாலசாமிக்கும் இடையே பிரச்சினையை சுமுகமாகத் தீர்த்துக் கொள்ளும் வாய்ப்பு நாளுக்கு நாள் எட்ட சென்று கொண்டிருப்பதாகக் கூறினார்.

கோபாலசாமியின் பேச்சுக்களையும் சொல்களையும் பார்க்கும் போது அவருடன் சமரசம் செய்வதற்கான வாய்ப்பு கிடையாது என்றும் கருணாநிதி கூறினார்.

தி. மு. க. பொதுச் செயலாளர் அன்பழகனைச் சந்தித்துப் பேசிய பின்னர் கோபாலசாமி மீது பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் சொன்னார்.

கோபாலசாமி நேற்று தனது வீட்டில் செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்தார்.

தம்மை கழகத்தில் இருந்து வெளியேற்றினால் தாம் விநோதமான ஒரு போராட்டத்தை ஆரம்பிக்கப்போவதாக அப்போது அவர் கூறினார்.

கட்சித் தலைமையுடன் சுமுகத் தீர்வு காணும் வாய்ப்பு கிடையாது என்றும் அவர் கூறினார்.

தம்மை ''கொலைகாரன்'' ''துரோகி'' ''காட்டிக் கொடுத்தவன்'' என்றெல்லாம் கருணாநிதி பேசிய பின்னர் சமரசத் தீர்வுக்கு வாய்ப்பே இல்லை என்றும் அவர் சொன்னார்.

தமது ஆதரவாளர்கள் தி.மு.க. குண்டர்களால் தாக்கப்படுவதாகவும் —

தம்மை அரசியல் ரீதியில் அழிக்க கருணாநிதி முயற்சிக்கின்றார் என்றும்— கோபாலசாமி கூறினார். (உ-எ)

## யாழ்ப்பாணத்தில் திருமூலர் விழா

யாழ்ப்பாணம், நவ. 10

திருமூலர் விழா கடந்த 30ஆம் திகதி யாழ். இந்து ஆரம்ப பாடசாலை மண்டபத்தில் மிக அடக்கமான முறையில் சிறப்பாக நடைபெற்றது. யாழ். மெய்கண்டார் உயர் நிறுவன ஆதரவில் இடம்பெற்ற இந்த விழாவில் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

விழாவில் கலந்து கொண்டவர்களுக்கு, கொழும்பு மௌனாச்சிரம நிறுவுநர் சுவாமி உமாசங்கரானந்த சரஸ்வதி ஷிஓம்ஷர் வெளியிட்ட ''திருமூலர் திரிசதீ'' நூல் இலவசமாக வழங்கப்பட்டது. சுவாமிகளால் வெளியிடப்பட்ட மற்றொரு நூலான திருமந்திரப் பெருநூலும் அறிமுகம் செய்யப்பட்டது.

அறிமுகவுரை நிகழ்த்திய மூதறிஞர் க. சி. குலரத்தினம் பேசுகையில், திருமூலரை நினைக்கவும், பேசவும், போற்றவும் இது உகந்த வேளை என்று குறிப்பிட்டார்.

சனிக்கிழமை தோறும் மெய்கண்டார் உயர் நிறுவன ஆதரவில் யாழ். இந்து ஆரம்ப பாடசாலை மண்டபத்தில் திருமந்திர ஆய்வு நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

ஆசிரியர்கள், அரசாங்க உத்தியோகத்தர்கள் உட்பட ஏராளமானோர் இந்த ஆய்வு வகுப்பில் கலந்துகொள்கின்றனர். (அ)

## கிளிநொச்சி வயல்களில் வெள்ளம்

யாழ்ப்பாணம், நவ. 10

கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த ஒருவாரமாக தொடர்ந்து பெய்து வரும் மழையால் வயல்கள் வெள்ளக் காடாக காட்சியளிக்கின்றன.

தாழ்ந்த நிலப் பகுதி மக்கள் வீடுகளை விட்டுவெளியேறியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (த-3)

## ஸ்ரீ.பி.ஆர்.எல்.எவ். பகிஷ்கரிக்கும்

கொழும்பு, நவ. 10

வரவு செலவுத் திட்ட உரையை பகிஷ்கரிப்பது என்று ஈ.பி.ஆர்.எல்.எவ். நாடாளுமன்றக் குழு முடிவு செய்துள்ளது.

நாட்டில் இனப்பிரச்சினை என ஒன்றுமில்லை; பயங்கரவாதப் பிரச்சினை தான் உள்ளது என்று ஜனாதிபதி விஜேதுங்கா கூறி, இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டு தமிழ் மக்களை அவர் தண்டிக்க முயற்சி எடுத்து வருவதையும் ஆட்சேபித்து இப் பகிஷ்கரிப்பை மேற்கொள்வதாக ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சி நேற்று விடுத்த பத்திரிகை அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-6)

# மாணவருக்கு தொடர்ந்து இலவச உணவு, நூல், சீருடை

### நிதி அமைச்சு அதிகாரி தகவல்

கொழும்பு, நவ. 10

''பாடசாலை மாணவர்களுக்கான மதிய உணவுத் திட்டம், இலவச சீருடை, பாடப்புத்தகங்கள் வழங்கும் திட்டம் ஆகியன அடுத்த வருடத்திலும் தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்படும்.''

— இப்படிக் கூறினார் நிதி அமைச்சின் வரவு - செலவு திட்டப்பிரிவுப் பணிப்பாளர் திருமதி கனகாம்பிகை பெர்னாண்டோ.

இன்று நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படவிருக்கும் வரவு - செலவுத் திட்டம் குறித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

இவ்வருடம் நடைமுறையில் உள்ள ஜனசக்தி அபிவிருத்தித் திட்டம் உட்பட ஏனைய அபிவிருத்தி திட்டங்கள் அடுத்த வருடம் தொடர்ந்து நடைமுறைப் படுத்தப்படும் என்றும் அவர் கூறினார். (உ-3)

---

பாதிப்புற்றோர்...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வும் — நிவாரணமாக வழங்கப்பட்டுவந்தது.

இக்கொடுப்பனவுகள் நிறுத்தப்படுவதால் யாழ்ப்பாணத்தில் மட்டும் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் பாதிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (அ-3)

---

இனப்பூசல்...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இனமோதல்களை இனியும் புறக்கணித்துக் கொண்டிருக்க முடியாது.

வல்லரசுகளிடையேயான கெடுபிடி யுத்தம் முடிந்ததை அடுத்து உலக பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இன்று இன ரீதியான யுத்தங்களே அமைந்துள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார்.

தேசிய எல்லைகள் மற்றும் சமுத்திரங்களுக்கு அப்பால் உள்ள நாடுகளில் நடைபெறும் சண்டைகளின் விளைவுகளில் இருந்து மக்கள் தங்களைத் தனிமைப்படுத்திக் கொண்டு வாழ முடியாது என்றும் அவர் கூறினார்.

கெடுபிடி யுத்த காலத்தில் உலகில் இடம்பெற்ற சம்பவங்கள் எல்லாம் வல்லரசுகளுக்கிடையேயான மோதல்கள் என்று கணிக்கப்பட்டன.

இன்று உலக நாடுகளிடையே இடம்பெற்று வரும் இன யுத்தங்கள் காரணமாக உலகுக்கு ஏற்பட்டுள்ள ஆபத்து குறித்து செயலாற்ற மக்களும் அவர்களின் தலைவர்களும் தயாராக இல்லை. இது தொடர்பான அவர்களின் அக்கறை வெகுவேகமாகக் குறைந்து வருகின்றது.

இன்று எந்த நாடும் குறிப்பாக பல இன மக்கள் வாழும் நாடுகள் இனரீதியான யுத்தங்களை சமாளிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. உலகின் இப்புதிய நெருக்கடி குறித்து உலகத் தலைவர்கள் தீவிர அக்கறை காட்ட வேண்டும். இல்லையேல் சர்வதேச சமூகத்தின் பாதுகாப்பின் அடித்தளமே பலவீனப்படுத்தப்பட்டு விடும் — என்றும் அவர் கூறினார். (எ)

## சங்கத்தானை அம்மன் கோயிலில் திருட்டு

தென்மராட்சி, நவ. 10

சாவகச்சேரி சங்கத்தானை மீனாட்சி அம்மன் கோயிலில் கடந்த ஞாயிறு இரவு புகுந்த திருடர்கள் மூலஸ்தான தங்கத் தகடுகள் உட்பட பெறுமதி மிக்க பல பொருள்களை அபகரித்துச் சென்றுள்ளனர்.

இது குறித்து சாவகச்சேரி காவல் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ஒ-117)

## நூல் வெளியீடு

குருநகர், நவ. 10

பிரபல எழுத்தாளர் திரு. க. குணராஜாவின் (செங்கை ஆழியானின்) ''யாழ்ப்பாணத்து இராத்திரிகள்'' சிறுகதைத் தொகுதி வெளியீட்டு விழா 14 ஆம்திகதி ஞாயிறு காலை 9.30 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறும்.

யாழ். இலக்கிய வட்டத் தலைவர் திரு. து. வைத்திலிங்கம் தலைமை தாங்குவார் திரு. க. சிவராமலிங்கம் வாழ்த்துரையையும், திரு. சிவ. சரவணபவன் (சிற்பி) வெளியீட்டுரையையும், திரு. டொமினிக் ஜீவா, திரு. சுந்தரம் டிவகலால ஆகியோர் மதிப்புரைகளையும் நிகழ்த்துவர். (உ-51)

# தொழில் நுட்பப் பயிற்சி: 27 இல் நேர்முகப் பரீட்சை

### தெரிவான மாணவர் பட்டியல்

யாழ்ப்பாணம், நவ. 10

மொறட்டுவ பல்கலைக் கழக தேசிய தொழில்நுட்ப சான்றிதழ் பயிற்சி நெறிக்கு தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான நேர்முகப் பரீட்சை நவம்பர் 27 ஆம் திகதி மொறட்டுவ பல்கலைக் கழகத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நேர்முகப் பரீட்சைக்கான அனுமதி அட்டை கிடைக்காதவர்கள் தமது தேசிய அடையாள அட்டையுடன் மொறட்டுவ பல்கலைக் கழகத்துக்கு நேரில் சென்று மாற்று அனுமதி அட்டை பெறலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து மொத்தம் 49 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் 29 பேர் யாழ்ப்பாண விலாசத்துடன் விண்ணப்பித்தவர்கள் கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து மூன்று பேரும், மன்னார் மாவட்டத்திலிருந்து மூன்று பேரும், முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்து ஒருவரும் தெரிவாகி உள்ளனர்.

தெரிவானவர்களின் பெயர் விவரத்தை இலக்கம் 15, இரண்டாவது ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில் உள்ள உதயன் விளம்பரப் பணிமனையில் பார்வையிடலாம். (அ-117)

# விளையாட்டு நிகழ்வுகள்

யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கிடையே யாழ். கல்வித்திணைக்களம் நடத்தி வரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று மாலை இடம் பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு;-

**யாழ். பல்கலைக்கழக மைதானத்தில்**

★ 19 வயதுப் பிரிவு :- ஏழாலை ஸ்ரீ முருகன் ம. வி. எதிர் சென். ஹென்றீஸ்.

★ 17 வயதுப் பிரிவு :- சென் ஜோசப் எதிர் மகாஜனா.

★ 19 வயதுப் பிரிவு :- கனகரத்தினம் ம. ம. வி. எதிர் மகாஜனா.

**கொக்குவில் இந்துவில்**

★ 17 வயதுப் பிரிவு :- நாவாந்துறை றோ. க. எதிர் இளவாலை மெய்கண்டான்.

★ 19 வயதுப் பிரிவு :- நாவாந்துறை றோ. க. எதிர் விக்டோரியா.

**யாழ். இந்துவில்**

★ 17 வயதுப் பிரிவு :- சென். ஹென்றீஸ் எதிர் உசன் இராமநாதன் கல்லூரி.

★ 17 வயதுப் பிரிவு :- அருணோதயா எதிர் ஏழாலை ஸ்ரீ முருகன் கல்லூரி.

ஒவ்வொரு மைதானத்திலும் முதலாவது ஆட்டம் பிற்பகல் 2 மணிக்கும் இரண்டாவது ஆட்டம் பிற்பகல் 2.45 மணிக்கும் மூன்றாவது ஆட்டம் 3.30 மணிக்கும் ஆரம்பமாகும்.

★ ★ ★

யாழ். மாவட்டப் பாடசாலைகள் விளையாட்டு விழா தொடர்பாக நடை பெறும் போட்டிகளில் ஆசிரியர்களுக்கான சதுரங்கச் சுற்றுப் போட்டி இன்று காலை 8 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரியிலும் –

பட்மின்ரன் இறுதி நிலைப் போட்டிகள் நாளை பிற்பகல் 12.30 மணி முதல் யாழ். இந்து மகளிர் கல்லூரி உள்ளக ஆடு களத்திலும் நடைபெறும்.

★ ★ ★

யாழ். மிட்ரவுண் றோட்ரறக்ட் கழகம் நடத்தும் உதைபந்தாட்டச்சுற்றுப் போட்டித் தொடரில் இன்று மாலை 3 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறும் ஆட்டம் ஒன்றில் சென். மேரீஸ் அணியை எதிர்த்து சென், நீக்கலெஸ் அணி மோதும். (உ-3)

# பல்கலைக்கழக மட்டத்தில் கலைக்கல்வி வந்துள்ளது

### மிருதங்க அரங்கேற்றத்தில் உரை

வலிகாமம் தெற்கு, நவ. 10

''காலத்துக்கேற்ப கல்வியில் மாற்றங்கள் நிகழ்ந்து வருகின்றன. அதேபோல் கலைக் கல்வியிலும் பல மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. குருகுலக் கல்வியாக இருந்த கலைகள், வகுப்பறைக் கல்விகளாக்கப்பட்டு, இன்று தொலைக்காட்சிக் கல்வியாக பரிணமித்துள்ளன. பல்கலைக் கழக மட்டத்தில் கலைக்கல்வி முன்னெடுக்கப்பட்டுள்ளது.''

செல்வன் நித்தியானந்தன் மதிருபனின் மிருதங்க அரங்கேற்றத்தில் பிரதம உரையாற்றிய யாழ். பல்கலைக் கழக கலைப் பீடாதிபதி பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை இவ்வாறு கூறினார்.

இராமநாதன் நுண்கலைக் கழக மிருதங்க விரிவுரையாளர் பிரம்மஸ்ரீ அ. நா. சோமாஸ்கந்த சர்மாவின் சிஷ்யன் மதிருபனின் மிருதங்க அரங்கேற்றம் இணுவில் பரராசசேகரப் பிள்ளையார் ஆலய கல்யாண மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

பேராசிரியர் பொ. பாலசுந்தரம் பிள்ளை மேலும் கூறியதாவது:–

''1956ஆம் ஆண்டுதிரு. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா பிரதமரான காலத்தில் சிங்கள மொழியும், சிங்களக் கலைகளும் புத்துயிர் பெற்றன. ஆனால் தமிழரைப் பொறுத்தவரை மொழியில் கவனம் செலுத்தப்பட்டதே தவிர கலை, கலாசாரத்தில் போதிய உற்சாகம் காட்டப்படவில்லை. அண்மைக் காலத்தில் கலைத்துறையில் பெரும் அக்கறை காண்பிக்கப்படுகிறது — என்றார். கலாநிதி ப. கோபாலகிருஷ்ணன், பிரம்மஸ்ரீ நா. வீரமணிஐயர், மிருதங்கமணி எம். என். செல்லத்துரை, திரு. ச. முத்துலிங்கம் உட்பட பலர் கருத்துரை வழங்கினர். (க-68-152)

(தமிழினம் காக்கும் வன்வளம் காப்போம்)

அறிவித்தல்

மெடிட்குவிட் ஆய்வுகூட பரிசோதகர் அ. சுந்தரலிங்கம் ஆகிய நான் இரு கிழமைகள் கொழும்பு சென்று விட்டு தற்போது திரும்பி வந்துள்ளேன் என சகலருக்கும் அறியத்தருகின்றேன்.

(6718) கே. கே. எஸ். வீதி, சுன்னாகம்

முக்கிய அறிவித்தல்

எம்மிடம் திருத்த வேலைக்கு தந்த T.V., டெக்குகளை அதிககாலமாக எடுக்காமல் இருப்பவர்கள் உடனடியாக இந்தமாத முடிவிற்குள் மீளப் பெற்றுக் கொள்ளவும்.

எவர்விஷன்

21, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
(சி/6587)

நல்லை ஆதீன சுவாமிகள் வரவேற்பு விழா

அண்மையில் இந்தியத் தலயாத்திரை ரிஷிகேசம் வரைசென்று வந்த நல்லைஆதீனசுவாமிகளுக்கும், திருக்கூட்டத்தினருக்கும் சுன்னாகம் ஸ்ரீ கதிரமலைச் சிவன் தேவஸ்தானத்தில் வரவேற்பு உபசார விழா நாளை **11–11–1993** வியாழக்கிழமை மாலை **4-00** மணிக்கு நடைபெறவுள்ளது. அனைவரும் வந்து சிறப்புரைகளையும் சுவாமிகளின் தலக்காட்சி உரையாசியையும் கேட்டுச் சிறப்பிக்குமாறு வேண்டுகிறோம்.

நா. சர்வேஸ்வரகுருக்கள்
கதிரமலை சிவன் தேவஸ்தானம்,
சுன்னாகம். (6719)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சிவபாக்கியம் இராமையா

திருமதி சிவபாக்கியம் இராமையா காலமானார். இவர் கொட்டடியைச் சேர்ந்த சு. இராமையா அவர்களின் அன்பு மனைவியும், திலகேஸ்வரி, ஆனந்தலிங்கம், இராஜேஸ்வரி (பவளம்), யோகநாதன் (ரயில்வே திணைக்களம்), மதிவதனி, டாக்டர் சதானந்தன், டாக்டர் சிவனேஸ்வரி, அம்பிகை, அம்பாலிகை, ரதி ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற கந்தசாமி, காலஞ்சென்ற இராசரட்ணம், சிவசுப்பிரமணியம், கனகசுந்தரம், விஜயநாதன், ரவீந்திரன், கனகசபை, சரஸா, தேவி, நளாயினி ஆகியோரின் அன்பு மாமியாரும் —

ரகுநந்தன், முரளீதரன், மீனா, ராஜ்குமார், காயத்திரி, துஷ்யந்தன், சிவராம், குமரேந்திரன், அயிராணி, மாதினி, மோகன், நிமலன், ரஞ்சித், சோபனா, மயூரன், சஞ்ஜே, சியாமா, ஐங்கரன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும், பிரவின், திவ்வியா, சுகாசினி, அருண், தேஷான் ஆகியோரின் அன்புப் பாட்டியாரும் ஆவார்.

அன்னாரது பூதவுடல் அவரது இல்லத்திலிருந்து இன்று 10ஆம் திகதி புதன்கிழமை காலை 10–00 மணிக்கு துண்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திருமதி ரதி கனகசபை.

27/1, காட்டுக்கந்தோர் ஒழுங்கை,
கண்டிக்குளி,
யாழ்ப்பாணம். [27976]

## நன்னித்தம்பி சீனித்தம்பி

நன்னித்தம்பி சீனித்தம்பி காலமாகிவிட்டார். இவர் இரத்தினத்தின் அன்புக் கணவரும், பத்மலோஜினி, சுபாஜினி ஆகியோரின் அருமைத் தகப்பனாரும், கனகலிங்கம், செல்வநாயகம் ஆகியோரின் மாமனாரும், திலிப்குமார், ரேணுகா, தர்மகுமார், திருலோககுமார், நவநீதகுமார், சஞ்ஜீவன், சுதர்சினி, சாந்தஜீவன் ஆகியோரின் பேரனும், கௌதமியின் பூட்டனுமாவார்.

அன்னாரது பூதவுடல் இன்று (10 - 11 – 1993) மாலை 3 மணிக்கு 67/43, தர்மலிங்கம் அவனியூ கொட்டடியில் இருந்து கோம்பையன் மணல் மயானத்துக்கு ஈமக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
த. கனகலிங்கம்

67/43, தர்மலிங்கம் அவனியு,
கொட்டடி,
யாழ்ப்பாணம். (27977)

## சுவாம்பிள்ளை பிரான்சிஸ்

(முன்னைநாள் கணக்குப் பரிசோதகர்)

37/6, நாவலர் வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சுவாம்பிள்ளை பிரான்சிஸ் 9 - 11 - 93 அன்று காலமானார்.

இவர் இராசமணியின் அன்புக் கணவரும், இராசகுமார் (சுவிஸ்), யான்சன், ஜனதா (சுவிஸ்), நிக்சன் (சுவிஸ்), சோபனா, சாம்ஷன், சோபியா, அன்ஷன் ஆகியோரின் அன்புத் தந்தையும், ரதி (சுவிஸ்), சிவகுமார் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், ரஜந்தினியின் (சுவிஸ்) பேரனும், செல்லம்மா, பாலசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற சின்னையா இராசம்மாவின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நேற்று (9 – 11 - 93) மாலை நாவாயத்துறை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மனைவி, மக்கள்.

37/6, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம். (27970)

## திருமதி சுப்பையா சின்னப்பிள்ளை

திருமதி சுப்பையா சின்னப்பிள்ளை 9. 11. 93 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் திருமதி. க. மகேஸ்வரி தேவராசன் (கூட்டுறவு அலுவலகம், யாழ்ப்பாணம்) திருமதி. இ. ஞானேஸ்வரி, புஸ்பராசமணி, லலிதா, வரதராஜா (தேசிய நீர்வளச் சபை, யாழ்ப்பாணம்) ஆகியோரது அன்புத்தாயாரும் இரத்தினசிங்கம், தனபாலசிங்கம், யோகரத்தினம் (இ. போ. ச. யாழ்ப்பாணம்), யோகப்பிரகாசவதி ஆகியோரது அன்பு மாமியாருமாவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் இன்று 10.11.93 சுதுமலை தெற்கு, மானிப்பாய் அன்னாரது இல்லத்தில் பகல் 12.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தாவடி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

தகவல்
சு. தேவராசன்
(மகன்)

சுதுமலை தெற்கு
மானிப்பாய். (27980)

## திருமதி சுப்பையா அன்னம்மா

குப்பிளானை பிறப்பிடமாகக் கொண்டவரும், கல்வியங்காட்டை வசிப்பிடமாகக் கொண்டவருமான, சுப்பையா அன்னம்மா அவர்கள் காலமானார்.

இவர் காலஞ்சென்ற சுப்பையாவின் அன்பு மனைவியும் தங்கம்மா, பாலசுந்தரம் (C. T. B.) அன்னபாக்கியம் (மலர்) ஆகியோரின் அன்புத்தாயாரும், காலஞ்சென்ற நவரத்தினம், தர்மலிங்கம், கலாறஞ்சினிதேவி, ஆகியோரின் அன்பு மாமியாரும், சந்திரசோதி, சந்திரகாந்தன், ரவிச்சந்திரன், சிறிதலாதேவி, ஹரிச்சந்திரன், சசிகலா, சிறிதரன், சசிதரன், ஜெயபாலன், குணபாலன், நேசபாலன், கஜித்தா ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரது பூதவுடல் இன்று (10. 11. 93) மதியம் 12 மணியளவில், அன்னாரின் இல்லத்தில் இருந்து. திருநெல்வேலி மயானத்திற்கு எடுத்து செல்லப்படும். இதனை உற்றார், உறவினர் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
சு. பாலசுந்தரம்
(மகன்)

G. P. S. றோட்
கல்வியங்காடு. (27978)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேசன் (பிறைவேற்) லிமிடெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 10 - 11 - 1993 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

---

சைவப் பெரியார்

## உயர்திரு வை. கதிர்காமநாதன்

ஆசிரியர் அவர்களின்

## பாராட்டு விழா

இடம்: இணுவில் ஸ்ரீபரராசசேகரப்பிள்ளையார் கோயில் கல்யாணமண்டபம்

காலம்: 1993ஆம் ஆண்டு ஐம்பசி மாதம் 26ஆம் நாள் நாளை (11-11-93) வியாழக்கிழமை மாலை 5.30 மணி.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்:
விழாக் குழுவினர்.

ஸ்ரீபரராசசேகரப்பிள்ளையார் கோயில்,
இணுவில். (சி-6342)

## இதயபூர்வமான நன்றிகள்

யாழ். இந்து குமாரசுவாமி மண்டபத்தில் 31-10-1993 ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற செல்வி தர்மினி தர்மகுலசிங்கத்தின் நடன நிகழ்ச்சி சிறப்புற நடைபெற பயிற்றுவித்த நடன ஆசிரியை மற்றும் கலைஞர்கள் அனைவருக்கும் என் இதய பூர்வமான நன்றிகள்.

செல்வி தர்மினி தர்மகுலசிங்கம்,
(யாழ். இந்து ஆரம்ப பாடசாலை)

[சி-6534]

---

இல்லையென்று ஏங்கினோம்!
ஏக்கம் தீர்ந்தது!!
இதோ - துயர் தீர்க்க

## உடற்கல்வி

நூல் வெளிவந்துவிட்டது.

நூலாசான்:-
திரு. கே. நாகமணி
(முன்னைநாள் உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் — யாழ். மாவட்டம்)

- மெய்வல்நலுநர் நிகழ்ச்சி
- சர்வதேச விளையாட்டுக்கள்
- அணி நடை
- சிறுவிளையாட்டுக்கள்......


இன்னும் பல அம்சங்களுடன்
86 பக்கங்கள்

★ சொற்பப்பிரதிகளே!
★ விரையுங்கள்!!

கிடைக்குமிடம்:-
பூபாலசிங்கம் புத்தகசாலை

மேலும் விவரங்கட்கு தொடர்பு:-
திரு. க. குமாரசாமி (ஆசிரியர்)
39, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
(27784)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



## தம்பிமுத்து கணேசன்

(தொழில்நுட்ப உத்தியோகத்தர், கட்டடத் திணைக்களம்)

தோற்றம்: 25 — 05 — 1942
மறைவு: 11 — 10 — 1993

எமது குடும்பத் தலைவரின் மறைவிற்கு வருகை தந்தும், பல உதவிகள் புரிந்தும், அனுதாபச் செய்திகள் அனுப்பியும் உதவி புரிந்த அனைவர்க்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இன்று 10 - 11 - 93 அன்று அன்னாரது இல்லத்தில் நிகழும் அந்திமக்கிரியைகளிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்

கொடிகாமம். (29783)

---

## இன்று

காங்கேசன்துறை மாவட்ட சாரணர் கிளைச் சங்கத்தின் வருடாந்த சாரணர் பாசறை விழா மற்றும் குருளை சாரணர் ஆண்டு விழா ஆகியவற்றின் இறுதிநாள் வைபவம் இன்று பிற்பகல் 2.30 மணிக்கு சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் நடைபெறும். (த)

★ ★ ★

சண்டிலிப்பாய் மாகியப்பிட்டி பகுதியைச் சேர்ந்த — வறுமைக் கோட்டுக்கு கீழ் உள்ள — 37 குடும்பங்களிற்கு சிறுகைத்தொழில் ஊக்குவிப்புப் பணம் இன்று பிற்பகல் 1 மணிக்கு சண்டிலிப்பாய் உதவி அரச அதிபர் பணிமனையில் வைத்து வழங்கப்படும். (த-15)

★ ★ ★

மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலய உயர்தர மாணவர் ஒன்றியத்தின் நண்பகல் உணவு விருந்து இன்று நடைபெறும். (த-117)

★ ★ ★

மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் மகளிர்க்கான நான்கு மாதகால மனையியற் பொருளாதார பயிற்சி நெறி இன்று புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நல்லை ஆதீனத்தில் ஆரம்பமாகும். (க)

## ஆலயங்களில்

திருகோணமலை ஸ்ரீ பத்திரகாளி அம்மன் கோவிலின் கௌரி விரத காப்பு எதிர்வரும் 13 ஆம் திகதி கல்வியங்காடு இலங்கை நாயகி அம்பாள் கோவிலில் நண்பகல் 12 மணிக்கு நடைபெறும் பூசையைத் தொடர்ந்து வழங்கப்படும். (த)

★ ★ ★

தொல்புரம் கொட்டடியம்பதி அருள்மிகு ஸ்ரீ ஆதிமுத்து மாரி அம்பாள் ஆலயத்தில் இன்று காலை 8–30 மணிக்கு பொங்கலும் விசேட அபிசேகமும் இடம்பெறும் (த-30)

★ ★ ★

நாட்டில் அமைதியும் சுபிட்சமும் நிலவவேண்டி வண்ணை ஐயனார் கோவிலடி விசுவேச விநாயகர் ஆலயத்தில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு விசேட சங்காபிஷேகம் நடைபெறும். (த)

## நாளை

யாழ். மாவட்டத்தில் உள்ள விவசாய போதனாசிரியர்களுக்கான மாதாந்த பயிற்சி கருத்தரங்கு நாளை வியாழன் காலை 9 மணிக்கு திருநெல்வேலியில் உள்ள விவசாயப் பயிற்சி நிலையத்தில் நடைபெறும். (த-17)

## பாடசாலைகளில்

பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழாவும், தாபகர் தினமும் இன்று பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் வித்தியாலய அதிபர் திரு. கா. நடராசா தலைமையில் நடைபெறும். (த-28)

★ ★ ★

திருநெல்வேலி கிழக்கு செங்குந்த இந்துக் கல்லூரியின் கல்விப் பொருட்காட்சி இன்றும். நாளையும் முற்பகல் 9 மணி முதல் 4 மணி வரை நடைபெறும். (உ–5)

★ ★ ★

ஆனைப்பந்தி மெதடிஸ்த மிஷன் வித்தியாலய பரிசளிப்பு விழா இன்று பிற்பகல் 2 மணிக்கு வித்தியாலய அதிபர் திரு. க. கணேசன் தலைமையில் நடைபெறும். பிரதம விருந்தினராக யாழ். கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி. வேலாயுதம் கலந்துகொள்வார். (த)

★ ★ ★

யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா நாளை வியாழன் காலை 9 மணிக்கு அதிபர் கா. தவராசா தலைமையில் பாடசாலை அரங்கில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக யாழ். கல்விப் பணிப்பாளர் திரு. ஆ. சுந்தரலிங்கமும், சிறப்பு விருந்தினர்களாக நல்லூர்க் கோட்ட உதவிக் கல்விப்பணிப்பாளர் திரு. வி. தாணையாவும், கல்வி மேம்பாட்டுக் கழகப் பொறுப்பாளர். திரு. வே. இளங்குமரனும் கலந்து கொள்வர். (த)

---

சுந்தரின்.....

(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ் வல்லான் பிரதேசக் கல்விப் பணிப்பாளர் இரா. சுந்தரனாரின் பெரு முயற்சியினாலும் இப்பாடசாலை இன்று கல்லூரி எனும் அந்தஸ்தைப் பெற்றுள்ளது என்று கூறின் அது மிகையாகாது.

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தாய் மடியில்
05 — 03 — 1940

இறை அடியில்
23 — 10 — 1992

## வைரமுத்து இலக்கணேஸ்வரன்

(பவா)

திதி: 10 — 11 — 1993

பன்னாலை நன்நகரில் பிறந்தவனே
பண்பாளா! பவா
எந்நாளும் உன் நினைவு எம்மை விட்டுப்
போகாதையா
வைரமுத்து பெற்றெடுத்த வைரமணிக்
களஞ்சியமே!
அருமையென அன்போடு அணைத்தெடுத்த
அற்புதமே!
''மண்ணில் நல்ல வண்ணம்'' வளமோடு
வாழ — நீ
கண்ணிமைக்கும் நேரத்தில் காலனுனைக்
கவர்ந்தானோ!
ஒரு வருடம் போனது தான் உன்னினைவோ
போகவில்லை
பெருவழுதி போன்றவனே பாரிலுனைக்
காண்போமோ?

பிரிவால் வாடும்:
தாய், உடன் பிறந்தோர்,
மைத்துனர், மைத்துனி, மருமக்கள்.

உரும்பராய் மேற்கு.
உரும்பராய். (6720)

# மரண அறிவித்தல்கள்

## கிருஷ்ணர் செல்வராசா

ஆவரங்காலைச் சேர்ந்தவரும், வலி. கிழக்குப் பிரதேசசபை தலைமைச் செயலகத்தில் கடமையாற்றிய வருமான கிருஷ்ணர் செல்வராசா அகால மரணமானார். இவர் மல்லிகாதேவியின் அன்புக் கணவரும், கிருஷ்ணானந்தி, கிருஷாந்தி ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற கிருஷ்ணர் – செல்லாச்சி ஆகியோரின் அன்பு மகனும், பாலகுமார், ஜெயக்குமார் ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற சின்னத்தம்பி - சின்னம்மா ஆகியோரின் அன்பு மருமகனும், இராசதுரை, சுப்பிரமணியம், தங்கவேல், கமலாதேவி, பூபதி, பரமேஸ்வரி ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10–11–93) காலை 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொல்லன்பனை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்கப்படுகின்றனர்.

தகவல்:
பாலகுமார்
(சகோதரன்)

ஆவரங்கால்,
புத்தூர். (27981)

## கணபதிப்பிள்ளை மகாலிங்கசிவம்

(பழைய ஆசிரியர் சங்கத் தலைவரும், இளைப்பாறிய அதிபரும்)

புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் 538, நாவலர் வீதியை வதிவிடமாகவும் கொண்ட க. மகாலிங்கசிவம் 06-11-1993 அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் புவனேஸ்வரி (இளைப்பாறிய ஆசிரியை) யின் அன்புக் கணவரும், மாலினி (B.Sc), மகிந்தன் (இந்தியா), மைதிலி (யாழ். பல்கலைக் கழக 2 ஆம் வருட விஞ்ஞான மாணவி) ஆகியோரின் பாசத் தந்தையும் ஆவார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் நேற்று (09-11-1993) கொழும்பில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும் படி வேண்டுகிறேன்.

தகவல்:
செ. கனகரெத்தினம்

(27799)

## கந்தையா பாலசுப்பிரமணியம்

நந்தாவில் கொக்குவிலைச் சேர்ந்த கந்தையா பாலசுப்பிரமணியம் 9 - 11 – 93 இல் காலமானார்.

அன்னார் கோணேஸ்வரியின் அன்புக் கணவரும், குமுதினி கருணாநிதி (சுவிஸ்), கேதீஸ்வரன், கமலேஸ்வரி பத்மநாதன், சாந்தினி சந்திரன் (சுவிஸ்), யோகதீசன் (சுவிஸ்) ஆகியோரின் தந்தையும், சரண்யா, சாருஜன், துவாரகா, நரேஸ், நிதர்சன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10–11–93) காலை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக 10 மணிக்கு கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மனைவி
பிள்ளைகள்

நந்தாவில் ஒழுங்கை,
கொக்குவில்.
(27982)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org